விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 மாசி 9 ஜ. ஆகி 11 இதழ் 11
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 21-2 1986

## இந்தியா கவலை!

(சென்னை)
யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்பொதுமக்கள் மீது விமானத் தாக்குதல் மேற்கொண்டமைக்கு தனது ஆழ்ந்த கவலையை இந்திய அரசு கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர்
(5ம் பக்கம் பார்க்க)

## "இலங்கைக்கான நிதியுதவியைக் குறைக்க வெளிநாடுகளை கோருவோம்!"

... சர்வதேச மனித உரிமைகள் இயக்கம்

(கொழும்பு)
இலங்கைப் பிரச்னைக்குக் கூடிய விரைவில் ஒரு அரசியல் தீர்வினைக் காண அரசாங்கம் சிரத்தையுள்ள முயற்சியைமேற் கொள்ளத்தவறும் பட்சத்தில் இலங்கைக்கு வெளிநாடுகளில் வழங்கப்படும் நிதியுதவிகளை குறைப்பதற்கு அல்லது நிறுத்துவதற்கு உலகளாவிய ரீதியில் பிரசார இயக்கம் நடாத்தத் சர்வதேச மனித உரிமைகள் இயக்கம் தீர்மானிக்க
(8-ம் பக்கம் பார்க்க)

## இனப் பிரச்னைக்கு சுமுகமான தீர்வுகாண



# ஜனாதிபதிவிதித்திருக்கும் ஒன்பது நிபந்தனைகள்!

(பி. ராஜரட்ணம்)

**நாட்டின் இனப் பிரச்னைக்கு சுமுகமான தீர்வைக் காணுவதற்கான முன்தேவையாக, தாம் விதித்துள்ள ஒன்பது நிபந்தனைகளைச் சம்பந்தப்பட்ட தரப்புகள் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அறிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன இது சம்பந்தமாக வெளியிட்டிருக்கும் ஒன்பது நிபந்தனைகளும் வருமாறு:

★ "இலங்கை அரசாங்கத்துடன் தற்போதைய தகராறில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்துத் தரப்பினரும் ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியல் யாப்பினையும் உத்தியோக மொழி, தேசியக்கொடி, தேசிய கீதம் தொடர்பான சட்ட ஏற்பாடுகளையும் ஏற்று, அங்கீகரிக்க வேண்டும்.

★ "ஈழம் என்ற தனிநாட்டினை அமைக்கும் முயற்சியைக் கைதுறக்கவேண்டும்; வன்செயல்களிலும் சட்டவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ள எல்லாத் தீவிரவாதக் குழுக்களும் இத்தகைய நடவடிக்கைகளைக் கைவிடவேண்டும்.

★ "தமது ஆளணிகளைக் கலைக்கவேண்டும்; இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள தீவிரவாதப் பயிற்சி முகாம்களை மூடவேண்டும்;

★ "சட்ட விரோதமான முறையில் ஆயுத தளபாடங்களை வைத்திருக்கும் அனைவரும் ஒருமாத காலத்தினுள் அவற்றை இலங்கை அரசின் அதிகாரம் பெற்ற அலுவலகத்தில் ஒப்படைக்கவேண்டும்.

★ "நாட்டு நிலவரத்தைக் சுமுகப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் [illegible] காப்புப்படையினரின் நடவடிக்கைகள் குறைக்கப்பட்டு
(5-ம் பக்கம் பார்க்க)

## 45 தமிழ் விவசாயிகள் கொலை

## 7 பேர் உயிருடன் எரிப்பு!

(மட்டக்களப்பு)
அக்கரைப்பற்றுப் பகுதியி [illegible] குளத்தில் 15 தமிழ் விவசாயிகள் ஆயுதப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை இப்பரிதாப [illegible] சம்பவம் நிகழ்ந்தது. விவசாயிகளான 45 பேர் (இரு பெண்கள் உட்பட) வயலில் நெல் அறுவடைசெய்து கொண்டிருந்தனர். திடீரென ஆயுதப்படையினரால் இவ் விவசாயிகள் கூட்டம் சுற்றிவளைக்கப்பட்டு துப்பாக்கி சூட்டுக்கிலக்கானார்கள். இவர்களுள் ஏழுபேர் நெற்கதிர் போருக்குள் உயிருடன் தூக்கிச் போடப்பட்டு தீவைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## "இராணுவத்தின் அதிகரித்த பங்கு முழு நாட்டுக்கும் ஆபத்து!" - சரத் எச்சரிக்கிறார்

[கொழும்பு]
"இன்று எம்நாட்டு அரசியலில் இராணுவம் அதிகரித்த பங்கினை வகித்துவருகின்றது. இது முழு நாட்டுக்குமே ஆபத்தானது. இராணுவத்துக்குக் கூடுதல் அதிகாரங்கள் மேலும் மேலும் வழங்கப்பட்டு வருகின்ற அதேவேளையில், இராணுவ பிரிகேடியர்களே பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு வருகின்றனர்."

கலவானை எம்.பி. திரு சரத் முத்துதெட்டுவேகம நேற்று பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை தொடர்பான விவாதத்தில் பேசுகையில் இவ்வாறு கூறினார்


"நாம் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள்" என்று சிலர் சொல்லுவதால்தானே
[5ம் பக்கம் பார்க்க]

## விமானக் குண்டுவீச்சை நிறுத்துக!

## ஜனாதிபதிக்கு யாழ். சட்டத்தரணிகள் சங்கம் தந்தி

[யாழ்ப்பாணம்]
விமானங்களிலிருந்து குண்டு போட்டு அப்பாவிப் பொது மக்களைக்கொல்லுவதை உடன் நிறுத்துமாறும், இராணுவ முகாம்களை வாபஸ்பெறுமாறும் ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்த்தனவிற்கு யாழ். சட்டத்தரணிகள் சங்கம் நேற்று அனுப்பியுள்ள அவசரத் தந்தியில் தெரிவித்துள்ளது.

இக்கோரிக்கைகளை வலியுறுத்தி விரைவில் யாழ். சட்டத்தரணிகள் யாழ் நகரில்
[5-ம் பக்கம் பார்க்க]



## விமானக் குண்டுவீச்சு: ரூ. 35 லட்சம் நஷ்டம்!

[ஏ. வி. மாணிக்கம்]
கோண்டாவில் மேற்கு-தாவடி வடக்குப்பகுதியில் இடம்பெற்றவிமானக்குண்டுத் தாக்குதலினால்சுமார்35லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 4-30 மணி தொடக்கம் ஒரு மணித்தியாலமாக மேற்குறிப்பிட்ட பகுதியில் ஆறு யுத்த விமானங்கள் குண்டுகள் வீசித் தாக்குதல் நடாத்தியது தெரிந்ததே.

விமானக் குண்டுத்தாக்குதலினால் பொது மக்களுக்குச் சொந்தமான 10 வீடுகள் சேதமடைந்தன; வெங்காயம், புகையிலை, உப உணவுப் பயிர்கள், வான்பயிர்கள் முதலியன நாசமாக்கப்பட்டன; உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டுள்ளன என்றும் பிரஜைகள்குழு விடுத்
(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

காரைநகர் மாப்பாண வூரியில் கல்வீடு வளவும், நல்லதண்ணீர்க்கிணறும், மலசல கூடமும் அமைந்த நாற்சதுரமானதும் மின்சாரவசதிகள் உடையதுமான, நல்ல போக்குவரத்து வசதியுடைய 4பரப்பு காணி விற்பனைக்குண்டு. கீழ்க்காணும் விலாசத்தில் எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம். இ. விஜிதா C/o து. தவச்செல்வம, வேலணை மேற்கு, வேலணை-8. C 861

வீட்டுத் தளபாடங்கள், தேக்கு அலுமாரிகள் Dressing Table, சிங்கர் மெசின், காரியாலய மேசைகள், விருந்தைக் கதிரைகள், நேசறிக் கதிரைகள், கட்டில்கள் சாப்பாட்டு மேசைகள், Belling Cooker, Oven, வெளியூர் கிளாஸ்வகைகள், Pyrex கோப்பைகள், Hall செற்றி, Bath Tub, Show Case, Baby Cot, மற்றும் கிளாஸ் வகைகள், துணிகள், பெட்சீற் விற்பனைக்குண்டு. தொடர்பு; பத்மநாதன், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு மருத்துவக் கல்லூரிக்கும் திருநெல்வேலி சந்திக்கும் இடையில். (C-864]

## வகுப்புகள்

G. A. Q. ஏப்பிரல் பரீட்சைக்குரிய புவியியல் துரிதமீட்டல் [60 மணி நேரம்] வகுப்பு 22-2-86 ஆரம்பமாகிறது. ஆசிரியர்-குணராசா, Jaffna Education Centre சாந்தி சினிமா முன்பாக யாழ்ப்பாணம். (C 846)

## மணப்பந்தல்

யாழ். இந்து வேளாளகுல பெற்ருேர் வெளிநாட்டில் பொறுப்பதிகாரியாக கடமை புரியும் மாத வருமானம் 25,000/- பெறும் தங்களது 33 வயது மகனுக்கு 28-30 வயதுக்குட்பட்ட ஆங்கில அறிவுடைய மணமகளைத் தேடுகிருர்கள். வெளிநாட்டுக்குப் போகக்கூடியவராக இருத்தல் வேண்டும். தகுதியுடையோர் முதற்கடிதத்துடன் புகைப்படம், சாதக விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். V. கனகரட்ணம், இல. 59, வித்தியாலய வீதி, திருகோணமலை. (C-859)

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

## நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

ஆனைக்கோட்டை அறிவொளி சனசமூக நிலையத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் க. தம்பிராஜா, உப தலைவர் மா. ஆனந்தராசா, செயலாளர் செ. விஜயகுமார், உப செயலாளர் க. கருணாகரன், பொருளாளர் மா. கணபதிப்பிள்ளை, உப பொருளாளர் சு விஜயகுமார். மற்றும் பல நிர்வாக உறுப்பினர்களும் தெரிவானுர்கள்,

# மின் தடை

## யாழ். மாநகர சபை எல்லைக்குள். இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

1986.02-23 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முக்கிய திருத்த வேலைகள் காரணமாக காலை 8-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணிவரை யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்திருக்கும் பின்வரும் உப மின் நிலையங்களுக்கு மின் விநியோகத் தடை ஏற்படுமென சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்ருேம்.

**உப மின் நிலையங்கள்**

1. குருநகர்,
2. கொன்வென்ற்,
3. சீ-நோர்,
4. குருநகர் குடியேற்றத் திட்டம்,
5. பாஷையூர்,
6. மனோகரா.

இம் மின்தடையால் பாதிப்புறும் சகல மின் நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது மன வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இப்படிக்கு
**மின் பொறியியலாளர்,**
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னுகம்.
(A - 265)

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி பரமேஸ்வரி குணபாலசிங்கம்**

[ஆசிரியை]
சிவப்பிரகாசம் ம. வி.
சங்கானை.

மலர்வு: 02 09-1934
உதிர்வு: 23-02-1984

திதி: 02-03-1986

புன்சிரிப்புச் சிந்தி புகழோடு வாழ்ந்த எங்கள் உள்ளத்தில் கொலுவிருந்து எங்கள் நெஞ்சை நிறைத்துவிட்டு, எங்களை எல்லாம் ஆருத்துயரில் மூழ்கடித்து, மீளாத் துயில்கொண்டு இறைவனடி சேர்ந்த உமது ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர் சமர்ப்பணம்.

**கணவன்,**
**பிள்ளைகள்.**

'பரமேஸ்வரி பவனம்,,
சங்கானை. (C789)

## முதலாண்டு நினைவஞ்சலி



**சங்கரப்பிள்ளை கணேசமூர்த்தி**

தோற்றம்:
31-03-1963
மறைவு:
04-03 1985
திதி: 21-02-1986

அன்பின் திருவுருவே ஆனந்தமான கணேசமூர்த்தியே ஆருத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு எங்கு சென்ருய் செல்வமே. உமது ஆத்மா சாந்தி அடைய வேண்டிநிற்கும்:

**அம்மா, அண்ணுமார், தங்கை, தம்பிமார், அண்ணி.**

கீரிமலை வீதி,
மாவிட்டபுரம்.
(C 856)

## ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் கோதண்டர் தர்மலிங்கம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர், வண்ணை. வைத்தீஸ்வர வித்தியாலயம்)

தோற்றம்: 10-01-1914
மறைவு: 04-03-1985

திதி: 21-02-1986

அன்னுரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்ருேம்.

**அன்பு மனைவி,**
**பிள்ளைகள்,**
**மருமக்கள்.**

225, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
[C 853]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனமின்றி மரணமெய்திய பழைய விலாசம்: விமானநிலையம் வீதி, வவுனியா. மரணமெய்தியபோது புதுவளவு, கோப்பாயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தையா பாலசுப்பிரமணியம் என்பவரின் மரணச்சொத்து விடயமாக,

— மரணமெய்தியவர்.

வேலுப்பிள்ளை கந்தையா பாலசுப்பிரமணியம் கைம்பெண் விசாலாட்சி, புதுவளவு, கோப்பாய்,

—மனுதாரர்.

வழ: இல. ரி / 3944

எதிராக

1. பாலசுப்பிரமணியம் சண்முகராஜா,
2. பாலசுப்பிரமணியம் சிறீஸ்கந்தராஜா,
3. பாலசுப்பிரமணியம் மகள் ரஜனி,
4. பாலசுப்பிரமணியம் மகள் ரமணி,
5. பொன்னம்பலம்மண்டலசேகரம். எல்லோரும் புதுவளவு, கோப்பாய் (4ம் எதிர்வாதி பராயமடையாதவர் ஆகையால் 5ம்எதிர்வாதிமூலம் வெளிப்படுகிருர்)

— எதிர்வாதிகள்.

மேலே குறிப்பிட்ட இலக்கம்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அகற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு பங்குனி மாதம் 7ந் நாளன்று முற்பகல் 9 30 மணிக்கு இந்நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்றுதிக் கட்டளை ஏன் முற்ருக்சப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

நீதிமன்றக்கட்டளைப்படி,

**கு. குலசிங்கம்,**
பதிவாளர்.

1986ம் ஆண்டு மாசி மாதம் 11ந் திகதி.

என்னுல் வரையப்பட்டது.

**த. சோமசுந்தரம்.**
மனுதாரின் சட்டத்தரணி.

**த. சோமசுந்தரம்,**
சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிசு,
93/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(C855)

## திருமுறை மன்றப் பண்ணிசைச் சேவை

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைத் திருமுறை மன்றம் தனது பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி ஈழத்திலும் தமிழகத்திலும் உள்ள தலை சிறந்த ஓதுவார்களைக்கொண்டு ஓதுவித்து ஒலிப்பதிவு செய்துள்ள தேவாரப் பண்ணிசை நாடாக்களைச் சகல ஆலயங்களுக்கும், சைவப் பேரறிஞர்களுக்கும் வழங்கவுள்ளது இந்த ஒலிப்பதிவுப் பண்ணிசைகளில் திருமுருக கிருபானந்த வாரியாரின் விளக்கவுரைகளும் பதிவு பெற்றுள்ளன.

மேற்படி திருமுறை மன்றம் தனது பத்தாவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு அருள் மிகு விநாயகர் ஆலயத்தில் 'திருமுறை அமுதம்' என்ற தலைப்பிலான பஞ்ச புராணத்தின் ஒரு பகுதியை வெளியிட்டு வைத்துள்ளனர். இத் தகவல்களைத் திருமுறை மன்ற அமைப்பாளர் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார். [ஐ]

## சிவநெறிக்கழக பண்ணிசைப் போட்டி

[பண்டத்தரிப்பு]

கீரிமலை சிவநெறிக் கழகம் நடாத்தும் நாவன்மை, பண்ணிசைப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் தற்போதைய சூழ்நிலையை முன்னிட்டுக் கீரிமலையில் நடைபெருது என்றும், யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, சுன்னுகம், பருத்தித்துறை ஆகிய இடங்களில் அவ்வப்பகுதி மாணவர்களின் நலனைமுன்னிட்டு இந்த இறுதிப்போட்டிகள் நடைபெறும் என்றும் கழகச்செயலாளர் ஆசிரியர் ச. விநாயகரத்தினம் அறிவித்துள்ளார். எதிர்வரும் 22 ம் திகதி சனிக்கிழமையன்று யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும், அடுத்த மாதம் 1 ம் திகதி சனிக்கிழமையன்று தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும், 2 ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று சுன்னுகம் இராமநாதன் மகளிர்கல்லூரியிலும், 9 ம் திகதி பருத்தித்துறை வட இந்துமகளிர் கல்லூரியிலும், இந்த இறுதிப் போட்டிகள் நடைபெறுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகளின் பரிசளிப்பு விழாக்கள் அடுத்த மாதம் 8 ம் திகதி கீரிமலை நகுலேஸ்வர ஆலய தேவஸ்தானத்திலும், 9 ம் திகதி ஞாயிற்றுக் கிழமையன்று பருத்தித்துறை வட இந்துமகளிர் கல்லூரியிலும் நடைபெறும்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

# பதவி வெற்றிடம்

## விற்பனை உதவியாளர்கள்

வயது: 18—35 வருடங்கள்.

கல்வித்தகைமைகள்: க. பொ. த. (சாதரணம்) பரீட்சையில் சித்தி/கூ. ச. ஊ. [சாதாரணம்] சான்றிதழ்.

சம்பளம்: 771/- — 950/- / 10 x 7 — 12-50 x 8 [எல்லாப்படிகளும் உட்பட]

விண்ணப்பங்களை 5-3-86-ம் திகதிக்குமுன் சுயமாகத் தயாரித்து அனுப்பிவைக்கவும்.

**பொதுமுகாமையாளர்.**

கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.
[A 267]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய ஒற்றுமையைப் பாதுகாக்க சபைபுனரமைப்பு!

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தலைமையிலான தேசிய ஒருமைப்பாட்டு சபையை புனரமைக்க இந்திய மத்திய அரசு முடிவுசெய்துள்ளது.

பிரதமர் ராஜீவ்காந்தி தலைமையிலான இச் சபையில் உள்துறை அமைச்சர், நிதி அமைச்சர், மனித ஆற்றல் மேம்பாட்டுத்துறை அமைச்சர். மாநில, யூனியன்பிரதேச முதலமைச்சர்கள் ஆகியோர் அங்கம்வகிப்பார்.

பிரபல அரசியல் வாதிகளான முன்னாள் பிரதமர் சரண்சிங், வாஜ்பாய், கலைஞர் கருணாநிதி, ஜெகஜீவன்ராம், எம். ஜி. ராமச்சந்திரன், என். டி. ராமராவ், சுர்ஜித்சிங் பர்ணலா ஆகியோரும் ஜி. பார்த்தசாரதி, பிரபல எழுத்தாளரான குஷ்வந்த்சிங், பிரபல திரையுலகப் பிரமுகர்களான சத்தியஜித்ரே, ஷியாம் பெனகர் ஆகியோர் இதில் அங்கம் வகிக்கும் முக்கியஸ்தர்களாவர். (செ)

## சவூதி தலைநகரில்

# சிகரெட் களவாடியவர்கள் சிறையில் இருக்கிறார்கள்

[சவூதியில் இருந்து எம் சுபேந்திரன்]

சவூதி அரேபியாவின் தலைநகரான றியாட்டில் பன்புவா என்னும் இடத்தில்உள்ளகடை ஒன்றில் சிகரெட் பெட்டிகளை களவாடிய தென்னிலங்கையைச் சேர்ந்த இருவர் அங்கே வசமாக மாட்டிக் கொண்டனர்.

தங்காலை, கடுவெல ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவரே அகப்பட்டுக் கொண்டவர்களாவர்.

பிரஸ்தாப இருவரும் கடையில் பத்துப் பைக்கட்டுக்களைக் கொண்ட 'ரூேத்மன்' சிகரெட் பெட்டிகள் இரண்டைக் களவாடிக் கொண்டு 'கம்பி நீட்ட'முயன்றபோது கடைக்காரரிடம் அகப்பட்டுக் கொண்டதாகவும், இவர்களில் ஒருவர் தப்பி ஓடி தமது இருப்பிடத்தில் மறைந்து கொண்டார் என்றும் பின்னர் இவரை இவர் பணியாற்றும் கம்பனி மன்புவா பொலிசில் ஒப்படைத்ததாகவும்தெரிவிக்கப்பட்டது.

தற்போது முத்தக்களிசிறைச்சாலையில் தண்டனைகளை அனுபவித்து வரும் இருவரும் இன்னும் இரு மாத காலத்தில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

# தொல்புரத்தில் இசை விழா

(சுழிபுரம்

தொல்புரம் சிவாகலா மன்றம் மாசி மாத மங்கள இசை விழா கலா மன்ற முன்றலில் சென்ற ஞாயிறு பிற்பகல் நடை பெற்றது சங்கீத பூஷணம் ப. முத்துக்குமாரசாமி சர்மாவின் இன்னிசை இதில் இடம் பெற்றது. மன்ற அமைப்பாளர் சிவசண்முகமூர்த்தி இசைவிழாவை ஆரம்பித்து வைத்தார்.

# சிறுவர்களுக்கு இலைக்கஞ்சி

(வண்ணார்பண்ணை)

யாழ் மாவட்ட மங்கையர் கழக உணவுத்திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பாலர்பாடசாலைகளில் வாரம் ஒருமுறை இலைக்கஞ்சி வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மங்கையர்சழகங்களினால் நடத்தப்படும் பாலர் பாடசாலைச் சிறுவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கப்படுகிறது.

இணுவில் மாதர்சங்கத்தின் ஆதரவுடன் நடைபெறும் மேற்படி கழக பாடசாலையில் முதன்முதலாக இவ்வைபவம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

சங்கத்தலைவி திருமதி செ. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் யாழ்.மாவட்டமங்கையர் கழகச் செயலாளர் திருமதி சத்தியாகந்தவனம் பொதுச் சுகாதார பரிசோதகர் திரு. ஆ. தங்கவேலாயுதம், சமாதானசபத் தலைவர் திரு. தி. சி. சண்முகலிங்கம் உட்பட பலர் உரையாற்றினர்கள்.

# பிலிப்பைன்ஸ் விவகாரம்: பாப்பரசர் தலையிடுகிறாராம்

## 'டாஸ்' குற்றச்சாட்டு

(மாஸ்கோ]

சோவியத் செய்திஸ்தாபனமான 'டாஸ்', பாப்பரசர் பிலிப்பைன்ஸின் உள் நாட்டு விவகாரங்களில் தலையிடுகிறார் என்று குற்றம் சாட்டியுள்ளது.

இதனை மேற்கோள் காட்டியே 'டாஸ்' தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது. டாஸ் மேலும் கூறுகையில் ''பாப்பரசர் பிலிப்பைன்ஸின் உள்ளூர் விவகாரங்களில் தலையிடுவது என்ற அமெரிக்கச் செயற்பாட்டுடன் இணைந்துள்ளது'' எனக் குறிப்பிட்டுள்ளது. (செ)

## உலகச் செய்திகள்

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர், பிலிப்பைன்ஸின் கத்தோலிக்க சபை மார்க்கோஸை எதிர்த்துப் போட்டியிட்ட திருமதி அகியூனோவுக்கு ஆதரவளிப்பது எனத் தீர்மானித்ததை ஆதரித்தார் என இத்தாலியப் பத்திரிகை ஒன்று செய்தி தெரிவித்துள்ளது.

# சிதம்பரத்தில் கோடி அர்ச்சனை

[சிதம்பரம்]

உலக அமைதிக்காகச் சிதம்பரம் நடராஜர் கோவிலில் முதல் முறையாக நூறு நாட்களிக்குக் கோடி அர்ச்சனை நடைபெற்று வருகிறது உலகிலேயே, இவ்வாலயத்தில் மட்டுமே இப் போது கோடி அர்ச்சனை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. [கெ]

# பயிற்சி வகுப்புக்கள்

(பசிலைப்பளி)

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இத்தாவில் என்னுமிடத்தில் தொழில் அமைச்சின் அனுசரணையுடன் தையல் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

சுமார் 25 யுவதிகள் இப் பயிற்சி வகுப்பில் கலந்து பயிற்சி பெற்று வருகிறார்கள்.

# பதற்றம்

(பச்சிலைப்பள்ளி)

வவனியா மன்னார் வீதியில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் சம்பவங்களை அடுத்து அவ்வீதியில் பிரயாணம் செய்வோர் பெரும் பீதிக்குள்ளாக வேண்டியுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

அண்மையில் பம்பைமடு, பூவரசங்குளம் ஆகிய இடங்களில் நடை பெற்ற சம்பவங்கள் பெரும் பீதியை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

# "கூட்டணி ஆலோசனைகள் ஈழத்துக்கான ஆரம்ப முயற்சியே!"

## இலங்கை அரசாங்கம் கூறுகிறது

[கொழும்பு]

''தமிழர்விடுதலைக்கூட்டணி தமதுகோரிக்கையின் மூலம் ஒரு தனிநாடான ஈழத்தைப் பெறுவதற்கு அடிக்கல்லையே நாட்டமுயல்கிறது என்பதில் எவ்விதசந்தேகமுமில்லை''

இவ்வாறு தமிழர்விடுதலைக் கூட்டணியினால் இனப்பிரச்னையின் தீர்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகளுக்கு இலங்கையரசாங்கம் விடுத்துள்ள பதிலறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

57 பக்கங்களை உள்ளடக்கிய இப்பதிலின் சிலமுக்கிய அம்சங்கள் வருமாறு:

''இக் கோரிக்கைகளின் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வடக்குக்கிழக்குப் பிரதேசங்களை மட்டுமன்றி மலையகம் மற்றும் வடமத்திய பிரதேசங்களையும் உள்ளடக்கிய தனிநாடான ஈழத்தின் அடிக்கல்லையே நாட்ட முயல்கின்றனர். தமிழர் விடுதலைக் கூட்டணியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகளில் இலங்கையரசாங்கத்தைப் பற்றிய ஆதாரமற்ற உண்மைகள் நிறைந்தனவாகவுள்ளன இவ்வாலோசனைகள் இந்திய அரசாங்கம் இலங்கையரசாங்கத்தைப்பற்றித் தவறான அபிப்பிராயத்தை உண்டாக்குவதற்காவும் இந்திய அரசின் இனப்பிரச்னை தொடர்பான பொது நிலைப்பாட்டை மாற்றுவதற்காகவுமே தயாரிக்கப்பட்டுள்ளன என்பதில் எமக்கு யாதொரு சந்தேகமுமில்லை.

''இலங்கையின் அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் நாட்டின் அதிகாரம்இங்குள்ள மக்களிடையே உள்ளது. அத்துடன் நாட்டின் இறைமை பிரிக்கப்படமுடியாததெனவும் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இதனால் ஒரு பிரிக்கப்பட்ட இறைமையுடைய சுயாட்சிமுறை இலங்கைக்கு நினைத்துப் பார்க்கக்கூடியதல்ல''

ஒரு நியாயமான மாற்றுத் தீர்வுக்கு உடன்படல் பற்றி இப்பதிலறிக்கை குறிப்பிடுகையில்:

''இத்தகைய ஒரு தீர்வு இலங்கையிலுள்ள அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான ஒரு தீர்வாகவே அமைய வேண்டுமே தவிர இந்தத்தீர்வு இலங்கையிலுள்ள தமிழ் மகக்ளை மாத்திரம்திருப்திப்படுத்துவதாக அமையமுடியாது. (அவர்களை மட்டும்தான் தவிகூ பிரதிநிதித்துவப்படுத்துகிறது)'' என்று கூறுகிறது.

### வடக்கு-கிழக்குஇணைப்பு

வடக்குக் கிழக்கு இணைப்புப் பற்றிப் பிரஸ்தாபிக்கையில்:

''பெரும்பான்மை 'தமிழ்ப் பேசும் பிரதேசங்களின்இணைப்புப் பற்றி குறிப்பிடுகையில் அது ஒரு இன மக்களையல்ல, மூன்றுஇன (இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லிம்கள்) மக்களையே குறிக்கின்றது. இத்தகைய ஒரு இணைப்பு ஏற்படுமானால் அதன்பின்னர் இந்த ஒன்றிணைக்கப்பட்ட நிர்வாக அமைப்பில் இலங்கைத் தமிழர்களே பெரும்பான்மைக் குழுவினராக மாறுவர்'' எனச் குறிப்பிடுகிறது

# இளவரசர் அன்ட்ரு இவ்வருடம் மணம்செய்வார்?

[லண்டன்]

பிரிட்டிஷ் மகாராணியின் இரண்டாவது புதல்வரான இளவரசர் அன்ட்ரு இவ்வருட நடுப்பகுதியளவில் திருமணம் செய்துகொள்வார்.

25 வயதுடைய இளவரசர் அன்ட்ரு, 26 வயதுடைய அழகியான சாராபேர்கியூசனைக் காதலிப்பதாக பிரிட்டிஷ் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன

இக்காதலுக்கு பிரிட்டிஷ் மகாராணியாரின் ஆசியும் உண்டெனவும் அப்பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

செல்வி பேர்கியூசர் இளவரசி டயானாவின் நெருங்கிய தோழியாவார்.

இளவரசர் அன்ட்ரு போக்லாந்துடனானயுத்தத்தில் ஒரு யுத்தவாகனப் பைலட்டாகக் கடமையாற்றினார். போரின் பின் அரை நிர்வாண மாடல் அழகியான கூஸ்டார்க் என்பவரை இவர் காதலித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

# புதிய வகுப்புக்கள்

[உடுவில்]

மானிப்பாய் இந்துக் கல்லூரி முறை சாரக் கல்விப் பகுதியில் சுருக்கெழுத்து தட்டெழுத்தாளர் பயிற்சி வகுப்பு ஆங்கில மொழியில் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளது.

ஜீ. சீ. ஈ. சாதாரண வகுப்பில் ஆங்கில பாடம் உட்பட சித்தியடைந்துள்ளவர்கள் விரும்பினால் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம் என்று கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

# கடத்தப்பட்ட இஸ்ரேலிய வீரர் படுகொலை!

[பெய்ரூத்]

இஸ்லாமிய எதிர்ப்பு முன்னணியினால் கடத்திச் செல்லப்பட்ட இரு இஸ்ரேல் படைவீரர்களில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த திங்கட்கிழமை, தென்லெபனானில்இஸ்ரேலினால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் 'பாதுகாப்புவலயத்தினுள்' வைத்துக்கடத்தப்பட்டது தெரிந்ததே.

கொல்லப்பட்டுள்ள இஸ்ரேல் வீரரின் உடலைப் பெற வேண்டுமானால் தென்லெபனானில் உள்ள இஸ்ரேலிய படைகளை அந்நாடு விலக்கிக் கொள்ளவேண்டும் என்று முன்னணி நிபந்தனைகளை விடுத்துள்ளது.

இதனிடையே கடத்தப்பட்ட மற்றவீரரைத் தேடிப் பிடிக்கும் முயற்சியில் இஸ்ரேலியப்படைகள் தொடர்ந்து ஈடுபட்டுள்ளன. கிராமங்களில் உள்ள ஆண்கள் அனைவரும் கடுமையான விசாரணைக்குட் படுத்தப்பட்டனர். (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கொல்லாமை நிலை பெற்றவனுடைய
முன்னிலையில் பகமை ஒழிந்து விடும்.

—பதஞ்சலி சூத்திரம்

# நமது நோக்கு

## கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்

அரபு நாடுகளில் பாலஸ்தீன அகதிமுகாம்கள் இருக்கும் பகுதிகளில் இஸ்ரேலிய விமானங்கள் குண்டுகளைவீசித் தாக்குதல் நடத்துவதுபற்றி அடிக்கடி பத்திரிகைகளில் வாசிக்கிறோம்.

தன்சொந்தப் பூமியிலிருந்து சர்வதேசச் சூழ்ச்சியின் காரணமாக அப்புறப்படுத்தப்பட்டுவிட்டபாலஸ்தீனமக்கள் தமது தாயகத்தை மீட்டெடுக்க நடத்திவரும் போராட்டத்தை நசுக்கிவிட இஸ்ரேலியர் ஈவிரக்கமற்ற முறையில் விமானத் தாக்குதல்களையும், இன்னோரன்ன பயங்கர நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருவது உலகப் பிரசித்தம்.

இந்த நடவடிக்கைகளின் போது பாலஸ்தீன அகதிகளும், பாமர சனங்களும் என்ன பாடுபடுகிறார்கள் என்பது பற்றி பெரும்பாலும் வெளியில் தெரிய வருவதில்லை. ஆனால் அவ்வாறான நிலைமையை இலங்கைத் தமிழ்மக்கள் இப்போது படிப்படியாக அனுபவித்து வருகிறார்கள். பாலஸ்தீன மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் எப்படியிருக்குமென்பதை தமிழ் மக்கள் இப்போது நன்கு புரிந்துகொண்டு விட்டார்கள்.

நேற்று முன்தினம் வடக்கில் நடத்தப்பட்ட விமானத்தாக்குதல் மேற்படி நிலைமையை நிதர்சனமாக உணர்த்தியது.

ஒரு குறித்த இடத்தில் அமைந்துள்ளதாகக் கருதப்பட்ட தீவிரவாத இளைஞர் முகாம் ஒன்றினைக் குறிவைத்து இந்த விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ள போதிலும் கண்மூடித்தனமான இத்தாக்குதலில் கோரமாகக் கொல்லப்பட்டவர்கள் அப்பாவிப் பொதுமக்கள். இரு சிறுவர்கள் துடிதுடிக்க மரணமாகியுள்ளனர். அரச மரத்தடியில் ஒதுங்கி நின்ற வயோதிபர் சிதறுண்டு போனார்—ஏனைய மரணங்கள் பற்றிய விபரம் உடன் தெரியவரவில்லை.

தந்தையுடன் கடைக்கு வந்த சிறுவனைத் துப்பாக்கியால் சுட்டு, வெகு தூரம் இழுத்துச்சென்று மயானத்தில் வீசி எறிந்துவிட்டுச் சென்ற சிப்பாய்க்கு பயங்கரவாதி யார், பாலகன் யார் என்பது தெரியாமல் போகுமானால் விமானத்தில் வந்து குண்டுபோடுபவனுக்கு பொதுமக்கள் யார் போராளி யார் என்பது தெரியாமல் போவது விசித்திரமல்ல.

மொத்தம் ஆறு விமானங்கள்! (ஐந்து என்றும்கூறுகிறார்கள்) உலக மகாயுத்த காலத்தில்தான் இவ்வாறு அணிவகுத்துப் பறப்பதைப் பார்த்திருக்கிறோம்! உள்நாட்டில் நீதி கேட்டு நிற்கும் ஒரு மக்கள் கூட்டத்தின் மீது, குண்டு மாரி பொழிந்துள்ளன ஹெலிகொப்டர் ஒன்றும் தாழப்பறந்து சுடுவதில் ஈடுபட்டிருந்தது. வடபகுதியையே இச்சம்பவம் நேற்று முன்தினம்பெரும் கெடி கலக்கத்துக்குள்ளாக்கி விட்டது: மக்கள் செய்வதறியாது அவதியுற்றார்கள். ஆகாயத்தில் விமானங்கள் செங்குத்தாக இறங்குவதும் குண்டுகளை வீசியபின் அதே வேகத்தில் மேலெழுந்து செல்வதும் பலமையில் தூரத்திலிருந்தவர்களாலும் காணக் கூடியதாக விருந்தது.

தீவிரவாத இளைஞர் முகாம்ஒன்றின்மீது மட்டும் குறிவைத்து இத்தாக்குதல் நடாத்தப்பட்டதாகக் கருதுவது மடமை. தமிழ் மக்களை அச்சுறுத்துவதேஇதன் நோக்கம்! மூலைக்கு மூலை ராணுவ முகாம்களை வைத்துக் கொண்டு, அடிக்கடி ஹெலிகொப்டர் தாக்குதல்களையும் நடத்திவரும் ஆயுதப்படையினர் திடீரென ஆறு விமானங்களில் வந்து குண்டுமாரி பொழிய வேண்டிய அவசியம் என்ன?

இதற்கு என்னதான்அரசு நியாயம் கற்பிக்க முயன்றாலும், தமிழ் மக்கள் மீது நடத்தப் பட்டுள்ள ஈவிரக்கமற்ற இந்த விமானத்தாக்குதல் பலத்த கண்டனத்துக்குரியது.

தமிழ்ப் போராளிகளுடன் ஆயுதப்படையினர் நேரடியாகப் போரிடுகிறார்கள் என்றால் அது வேறுவிடயம் போரின்போது கொல்லப் படுபவர்களில் பெரும்பாலானவர்களும் தமிழ் பொது மக்கள்-குழந்தைகள், சிறுவர்கள், வயோதிபர்கள் என்றால் நிச்சயமாக அதில் வேறு நோக்கம் இருக்கின்றது என்றே கருத வேண்டும். அதுவும் பொதுமக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் யுத்த விமானங்களிலிருந்து குண்டுகளை வீசுவதென்பது உண்மை ஜனநாயகத்தைப் பேணும் எந்த அரசும் செய்யத்துணியாத செயலாகும்

இம்மாதிரியான விமானத் தாக்குதல்களை அரசுதொடர்ந்து நடத்தாமல் நிறுத்துவதே புத்திசாலித்தனம். தீவிரவாதிகளை அழிப்பதாகக் கூறிக்கொண்டு இவ்வாறு விமானத் தாக்குதல்கள் நடத்தப் படுமானால் தமிழ் இனஅழிப்பில் இவ்வரசு ஈடுபட்டுவருகின்றது என்ற குற்றச்சாட்டை மேலும் உறுதிப்படுத்துவதாகவே இருக்கும்.

## மீன் பிடிக்க அனுமதி

[கிளிநொச்சி]

ஆனையிறவு இராணுவ முகாமிற்கு அருகில் உள்ள கடலில் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து நூற்றுக்கு மேற்பட்ட மீனவர்கள் இராணுவ முகாமிற்கு அருகில் மீன்பிடிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரஸ்தாப மீனவர்கள் ஆனையிறவில் வாடிகளை அமைத்துத் தங்கி இருந்தே மீன்பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

# வைத்திய ஊழியரும் பொது மக்களும்

இன்று ஈழவர்படும் இன்னல்களோ எண்ணிலடங்கா. தம் இடர் தீரத் தம் தலைகளையே பணயம் வைத்துப் போராடி வரும் காலமிது ஈழம் என்றும் இரத்த வெள்ளத்தால்சகதியாக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறான ஒருநிலைமையின் போது அல்லற்படும் மக்களுக்கு அனுசரணையாக, ஆதரவாக இருக்க வேண்டியவைகளுள் மிகவும்முக்கியமானவை வைத்தியசாலைகளே! இக்கால கட்டத்தில் இவை ஆற்றும் அளப்பரிய சேவைகளுக்கு நிகர் இருக்கமுடியாது. இருப்பினும் எங்கள் பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகள் இன்றுள்ள சூழ்நிலைக்கேற்ப பணிபுரிகின்றனவா என்பது முக்கியமானதொரு கேள்வி. எமது உடல்காக்கும், உயிர்காக்கும் எமது பிரதேசவைத்தியசாலைகளை அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட்டால் வியத்தகு முறையில் மேலும் செயலாற்றச் செய்யமுடியும்.

## மக்கள் கருத்து

பெரும்பாலும், இலவச சேவையாற்றும் வைத்திய சாலை மட்டங்களில் பார்வையாளர்கள். நோயாளர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் இடையில் ஒரு புரிந்துணர்வில்லாத நிலைமை நிலவுகின்றது. நெருக்கடி நிலைமைகளின் போது நோயாளரைப் பார்வையிடுவதற்கு ஒதுக்கப்படும் குறிப்பிட்ட நேரத்தைச் செவ்வனே நெறிப்படுத்த முடியாமல் வைத்தியசாலை நிர்வாகிகள் திண்டாடுகின்றார்கள், பார்வையாளர்களின் சிரமங்களைக் கருத்திற் கொண்டும், நோயாளிகளின் தேவைகளைக் கருத்திற் கொண்டும் சட்ட திட்டங்களை கடுமையாக நடைமுறைப்படுத்தாமல் ஓரளவுக்கு விட்டுக்கொடுக்க வேண்டிய நிர்பந்தத்திற்குள்ளாகின்றார்கள்

இதனைப் புரிந்துகொண்டு பார்வையாளராகச் செல்லும் மக்கள்தமது நேசத்துக்குள்ளானநோயாளிக்கும், ஏனையநோயாளிகட்கும், அங்கு வைத்திய சேவையிலீடுபடுவபர்களுக்கும் அசௌரியங்கள் ஏற்படாத வண்ணம் நடந்துகொள்ள வேண்டும். எத்தனையோ சிரமங்கள் மத்தியிலும் வைத்திய சாலைகட்கு வந்து தமது புனிதமான கடமையை வைத்திய சேவை ஊழியர்கள் செய்து கொண்டிருப்பார்கள். எத்தனையோ விதமான நோய்களால் பீடிக்கப்பட்ட நோயாளிகள் துன்பப்பட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்களது இனத்தவர்கள், நேசமானவர்கள் வேதனையோடும், விரக்தியோடும் ஏங்கித் தவித்துக் கொண்டிருப்பார்கள். இவர்களையெல்லாம் நாம் கருத்திற் கொண்டு அங்கு அதற்கமைய நடந்துகொள்ள வேண்டும்.

அங்கு தனக்கு வேண்டிய நோயாளியைப் பார்க்கப் போகும்போது நோயாளிக்கே முன், பின் தெரியாத பலரையும் அழைத்துக் கொண்டு ஒரு பொழுது போக்குக்காக, ஒரு களியாட்ட விழாவிற்குச் செல்வது போல் செல்லல், அங்கு நின்று அநாவசியமான சம்பாசணைகள் புரிதல் போன்றன நிச்சயமாகத் தவிர்க்கப் படவேண்டும். கூடியளவு வைத்தியசாலையில் சுகாதாரத்தையும், தூய்மையையும் பேணுவதில் நாமனைவரும் இயன்றளவு முயலவேண்டும். இதன் மூலம் பல வழிகளில் வைத்திய சேவையிலீடுபடுவர்களுக்கு நாம் குறைந்தபட்சம் செய்யக்கூடிய ஒத்தாசையினைச் செய்துதவலாம்.

ஆனாலும் சில வைத்தியசேவையாளர்கள் சில சமயங்களில் நோயாளிகளை வேதனைக்குரிய முறையில் நடத்துவதும் பார்வையாளர்களோடு எரிந்து விழுவதும் சதாரணமாகவுள்ளன. இவர்களின் நடவடிக்கைகள் அந்த ஒப்பற்ற பணிக்கு ஏற்பட்ட சாபக்கேடு என்றுதான் சொல்ல வேண்டும். மக்கள் வைத்திய சேவையிலீடுபடுபவர்களை அன்புக்கு இலக்கணமாய், பொறுமையின் இருப்பிடமாய், சருணையின் ஊற்றாய், தன்னலமற்ற தியாக புருஷர்களாய்த் தான் எதிர் பார்க்கிறார்கள். ஆனால், வேதனையின் விளிம்பிலும், விரத்தியின் எல்லையிலும் வைத்திய சாலையை அணுகும் நோயாள, பார்வையாள மக்களிடம் சில வைத்திய சேவையாளர்கள் சீறிச் சினந்து விழிகிறார்கள்.

இதே வேளை முன், பின் தெரியாத நோயாளி ஒருவருக்கு உயிராபத்தான சந்தர்ப்பத்தில் கிடைக்க முடியாது போன உதிரத்தைத் தன் உடலில் இருந்து ஈய்ந்து வைத்தியத் துறைக்கே வரலாற்றுப் பெருமை தேடிய வைத்திய சேவையாளர்களும் கூடவே உள்ளார்கள் எனும்போது உள்ளம் நெகிழ்கின்றது.

ஒரு சில தினங்களுக்கு முன்னும் இளைஞர் கோஷ்டி ஒன்று யாழ். அரசினர் வைத்தியசாலையினுள் அடாவடித் தனங்கள் புரிந்ததாக அறியக்கூடியதாய் யுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களைச் சாட்டாக வைத்து யாழ். வைத்தியசாலையை அரசாங்கம் பல விசயங்களில்புறக்கணித்து வருகின்றது. அண்மையில் கூட யாழ். அரசினர் வைத்தியசாலைககென ஒழுங்கு செய்யப்பட்டு தயாராக இருந்த அம்புலன்ஸ் வண்டி ஒன்றை எடுத்துவர இங்கிருந்து சென்ற வைத்திய ஊழியர் ஒருவரும், சாரதி ஒருவரும் வெறுங் கையுடன் திரும்பினர். அரசு கடைசி நேரத்தில் யாழ்ப்பாணம் கொண்டு செல்ல மறுப்புத் தெரிவித்தமையே காரணமாம்! ஒனும் போது நாமே நம் தலையில் சேற்றைப் பூசுவதுபோலாகின்றது.

எந்த நிமிடத்திலும், எந்தக் கணத்திலும் ஈழவராகிய நாம் தெருவிலும், புழுதியிலும், வீட்டிலும், கடலிலும் எமது குருதியை நாம் விரும்பாமலே சிந்துவதற்குத் தயாராக உள்ளோம்! நாம் விரும்பியோ, விரும்பாமலோ எமது இரத்தம் ஆறுகப் பாயக்கூடிய அபாய கண்டத்திலே நாமனைவரும் வாழ்வது யாராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாத நிலைமை.

இதனையுணர்ந்து இன்றைய கால கட்டத்தின் ஈடில்லாத் தானமாம் இரத்த தானம் செய்து எம்மவர் உயிர் காப்போம்.

கு. சூரியகுமார்,
காங்கேசன்துறை.

## வில்லிஸ் லண்டன் பயணம்

[யாழ்ப்பாணம்]

'ஈரோஸ்' இயக்கத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ள திருமதி வில்லிஸ் நேற்று லண்டன் பயணமானார்.

திருமதி வில்லிஸ் கடந்த மாசம் 17ம் திகதி முல்லைத் தீவில் வைத்துக் கடத்தப்பட்டு இம்மாதம் 18ம் திகதி நல்லூரில் விடுதலை செய்யப்பட்டதும் தெரிந்ததே!

[செ]




## சத்திரயாகம்

திருக்கேதீச்சரம்-திருகோணமலை - பொன்னலை - வல்லிபுரம் - கதிர்காமம் முதலிய நம் நாட்டுப்புண்ணிய தலங்களின் மகிமையைக் கூறுவது தஷிண கைலாச புராணமாகும். இப்புராணம் சூத முனிவரால் முனிவர்கட்கு கூறப்பட்டது.

கோமதியாற்றங்கரையில் நடைபெற்ற ஒரு சத்திரயாக முடிவிலேயே சூதமுனிவர் தஷிண கைலா புராணத்தை; யாகம் செய்து புண்ணியவான்களாக விளங்கிய முனிவர்கட்கு உபதேசித்தார் என்பதே தஷிணகைலாச புராண வரலாறாகும்.

சத்திரம்என்றால்பலர்சென்று தங்குவதற்கு உரிய இடம். சத்திரத்தில் தங்குபவர்க்கு அதிகாரியோ தலைவரோ இருப்பதில்லை. சத்திரத்திலிருக்கும் போது ஒவ்வொருவரும் தமக்குத்தாமே அதிகாரியாக இருப்பர். இந்தக் கோட்பாட்டிலேயே சத்திரயாகத்தில் பங்குபற்றும் ஒவ்வொருவரும் அந்த யாகத்திற்கு உரியவராய் இருந்து பயன் பெறுவர். இப்படியான சத்திரயாகம் போன்றதே உலக நன்மை கருதி ஆலயங்களில் நடைபெறும் இலட்சார்ச்சனை சங்காபிஷேகம் முதலிய புண்ணிய கருமங்கள். இப்படியான புண்ணிய கருமங்களில் பங்கு பற்றியும் தரிசனம் செய்தும் நன்மையடைய எண்ணுவோர் ஒவ்வொருவரும் அப்புண்ணிய கருமப்பயன் தமக்குச்சேரும் வகையில் புனிதராகவும் தம்மால் இயன்ற வகையில் பங்கேற்பவராகவும் இருத்தல் அவசியம்.

மனத்தினாலும் வாக்கினாலும் செயலினாலும் புண்ணியமான பொதுக் கருமங்களில் பலர் பங்கு-பங்கு பற்றுவதால் அப்புண்ணியப்பலன் இலட்சமாய்க் கோடியாய்ப்பெருகி பாபப்பயனான துன்ப அநுபவங்களைக் கீழ்ப்படுத்தி எங்கும் இன்பம் சூழ உதவும்.

இலட்சார்ச்சனையாகிய சத்திரயாகத்தில் பங்கு பற்றும் ஒவ்வொருவரும் அர்ச்சனை வேளையில் தாமும் குறிப்பிட்ட தெய்வ நாமத்தைத் தம் மனத்தினுள் திரும்பத் திரும்ப இடையறாது சொல்லி வணங்க வேண்டும்.

யாகம் செய்யும் முனிவர்கள் தாம் செய்த யாகச சிறப்பால் மகிமை வாய்ந்த முனிசிரேட்டரைச் சந்தித்தல் அவரது திவ்வியமான வார்த்தைகளை கேட்டு மகிழ்தல் தரிசனம் செய்தல் என்பனவற்றால் தம் செய்கையில் ஏற்பட்ட தவறுகளை நீக்கி நிறைவுறல்-மனத்திருப்தியடைதல் என்றும் பயன்களை பிரத்தியட்சமாக [வெளிப்படையாக] உணருவர். அதேபோன்று நாம் புண்ணிய கருமத்தில் முறையாகப் பங்குபற்றி திருப்தியுறுவதவசியம். இப்படியான திருப்தியை வேண்டியும் வழிபாடு மேற்கொள்வது பெரியோர் இயல்பாகும்.

வாழ்க அந்தணர்
வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்
வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம்
அரன் நாமமே
சூழ்க வையசமும்
துயர் தீர்க்கவே.
திருஞானசம்பந்தர்,

-அருளாளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

செல்லையா ஹென்றி துரைச்சாமி



பிறப்பு: 18-01-1915
இறப்பு: 21-02-1985

''உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.''

உங்கள் பிரிவால் வாடும்,

மனைவி, மகள்,
மருமகன்,
மகன்மார்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

10, பிளேச்சர் லேன்,
சுண்டிக்குளி.

[C 875]

## இராணுவத்தின் அதிகாரி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்னவோ. வடக்கில் மட்டுமன்றி நாட்டின் இதர பகுதிகளிலும் அடாவடித்தனமான அத்துமீறல்கள் நடைபெற்று வருகின்றன. சிவில் சுதந்திரத்தை நசுக்கவும், எதிர்க் கட்சிகளை அடக்கியொடுக்குவதற்கும் அவசரகால நிலையை அரசு தாராளமாகப் பயன்படுத்திவருகின்றது. முன்னுள் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள், ஜே. வி. பி. உறுப்பினர்கள் உட்பட ஏறத்தாழ 300 பேர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு தடுப்புகாவலில் வைக்கப்பட்டுள்ளனர்'' என்று திரு முத்தெட்டுவேகம தமது உரையின்போது மேலும் கூறினுர்.

''அப்பாவிப் பொது மக்களுக்கு அரசு பாதுகாப்பு அளிக்காத பட்சத்தில் அவர்கள் பேரினவாதிகளின் கைகளில் பகடைக்காய்களாக மாறுவார்கள்''; எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### "இராணுவ அதிகாரம்"

இந்த விவாதத்தின்போது உரையாற்றிய மஹரகம எம். பி. தினேஷ் குணவர்த்தன கூறியதாவது;

''வட. கிழக்குப் பிரதேசங்களில் இராணுவ அதிகாரம் நடக்கிறது. முழுநாட்டின் ஆட்சி அதிகாரமுமே துப்பாக்கியின் கைகளில் தங்கியிருக்கும் அபாயம் உருவாகி வருகின்றது''

## ஜனதிபதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவசரகால நிலைமையும் அகற்றப்படும்.

★ ''1983 ஜூலை முதல் 1985 ஆகஸ்ட் வரை அவ்வப்போது நடைபெற்ற இனக் கலவரங்கள் தொடர்பாக வழக்கு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளவர்களின் வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு அவர்களுக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்வது;

★ ''இங்கும் வெளிநாடுகளிலும் அகதிகளாக இருப்பவர்களை மீண்டும் தத்தமது பிரதேசங்களில் குடியமர்த்துவதற்கான நல்ல சூழ்நிலைகளை குழப்பாமல் இருக்க வேண்டும்;

★ ''இந்த நிபந்தனைகளின் அடிப்படையில் உடன்பாடு ஏற்பட்டு அது நடைமுறைக்கு வருவதுடன் இலங்கை அரசு இனப்பிரச்னைக்குத்தீர்வுகாணுவதை நோக்கி முயற்சிகளை மேற்கொள்ளும்;

★ நாட்டின் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் மாகாண, மாவட்ட சபைகளை நிறுவும் சட்டவாக்கத்தை நாடாளுமன்றத்தில் முன்வைக்க அரசு உடன்படுகிறது.



தாவடி வடக்கில் விமானக் குண்டுத் தாக்குதலுக்குப் பலியான இரு சிறுவர்களின் படங்களை இங்கு காண்கிறீர்கள்.

## 'மலைப்புலிகள்' பற்றி சபையில் காமினி!

(கொழும்பு)

''மலையகத்தில் ஒரு புதிய தீவிரவாத இயக்கம் உருவாகியுள்ளதாக எனக்குத் தெரிய வருகின்றது. 'மலைப்புலிகள்' என்ற பேரிலான இந்த இயக்கத்துக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்பதை நான் உறுதியாக நம்புகிறேன்''

நேற்று நாடாளுமன்றத்தில் அவசரகால நீடிப்பு தொடர்பான விவாதத்தில் பேசும்போது காணி. மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா மேற்கண்டவாறு கூறினுர்.

இ. தொ. கா. வின் முக்கியஸ்தர்களில் ஒருவரான திரு. ராஜூவுடன் நான் இப்புதிய தீவிரவாத இயக்கத்துக்கும் இ. தொ. கா. வுக்குமுள்ள தொடர்புபற்றி கேட்டபோது அவர் அதிர்ச்சியுற்றுர். 'மலைப்புலிகள்' என்ற பெயர் சில இடங்களில் அடிபடுவதைக் காற்றுவாக்கில் தாம் கேள்விப்பட்டதாயும், ஆனுல் தமது ஸ்தாபனத்துக்கும் மேற்படி 'மலைப்புலி' களுக்குமிடையில் எதுவித சம்பந்தமும் இல்லையென்றும் அவர் உறுதியாகக் கூறினுர் என்று அமைச்சர் திரு. திஸநாயக்கா தமது உரையின்போது மேலும் கூறினுர்.

## "6 விமானங்கள் வட்டமிட்டு குண்டு வீசின!

### மரணவிசாரணையில் சாட்சியம்

[கா. யோகநாதன்]

''தாவடியிலுள்ள என் மாமா வீட்டிலிருந்தபோது 6 விமானங்கள் வானத்தில் வட்டமிட்டன. திடீரென ஒரு விமானம் கீழ்நோக்கி வேகமாக வந்ததும் குண்டுவெடிக்கும் சத்தம் கேட்டது. விமானம் பின் மேல்நோக்கி வேகமாகச் சென்றது. வீட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த இரு சிறுவர்கள் பலியானுர்கள். வீடுகள் சேதமடைந்தன; மரங்கள் முறிந்து விழுந்தன.''

தாவடியில் குண்டுக்குப் பலியான இரு சிறுவர்களின் மரண விசாரணையில் சாட்சியமளித்த அளவெட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் கெங்காதரன் இவ்வாறு கூறினுர்.

யாழ் ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவில் நேற்றுக்காலை யாழ் நீதவான் எஸ். நாகராசா மரணவிசாரணை நடத்தினுர். கெங்காதரன் மேலும் கூறியதாவது;

'இறந்த சிறுவர்கள் தாவடியைச் சேர்ந்த 7 வயதான எஸ். மயூதரன், நுவரெலியாவைச் சேர்ந்த 10 வயதான ராஜசேகரன் ஆகியோராகும்.

''தாவடியில் மாமாவீட்டில் இருந்தபோது விமானங்கள் வரும் சத்தம் கேட்டது. எல்லோரும் ஓடிப்போய் திக்குத் திக்காக ஒழித்திருந்தார்கள். விமானத்திலிருந்து குண்டு போட்டனர்.

''தென்னை' மாமரங்கள் முறிந்து விழுந்தன. வீட்டுக் கூரை சேதமடைந்தது. வீட்டு மதில் சரிந்து விழுந்தது முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த இரு சிறுவர்மீதும் மதில் விழுந்தது மதிலின்கீழ் உடல்வேறு தலைவேருக ஒரு சிறுவனை மீட்டோம். மற்றச் சிறுவன் மதில் இடிபாடுகளுக்குள் சருகிக் கிடந்தார். 6 மணிபோல் இரு சிறுவர்களின் சடலங்களையும் காரில் யாழ் ஆஸ்பத்திரிச்கு கொண்டுவந்தோம். அப்பகுதியில் பல வீடுகள் சேதமடைந்திருந்தன. வீட்டு ஓடுகள் வெடித்துச் சிதறியிருந்தன. யன்னல் கதவுகள் உடைந்த நிலையில் காணப்பட்டன. மாமா வீட்டு மதிலும் உடைந்து விழுந்து கிடந்தது.''

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட நீதவான் இம்மாதம் 26ம் திகதி காலை யாழ் நீதிமன்றத்தில் விசாரணைதொடர்ந்து நடைபெறுமென்றும், சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள், அன்று சாட்சியமளிக்கலாமென்று தெரிவித்தார். [க]

## விமானக்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஊர்வலமொன்றை நடத்துவதென்றும் யாழ் சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

யாழ். நீதிமன்றத்திலிருந்து புறப்பட்டு, நகர்வீதி வழியாக கச்சேரிக்குச்சென்று யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் கோரிக்கைகளை வலியுறுத்தும் மகஜர் ஒன்றை சமர்ப்பிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைக்கு ஊர்காவற்றுறை. மல்லாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை, கிளிநொச்சி சட்டத்தரணிகள் சங்கங்களின் ஆலோசனையையும் ஆதரவையும் பெறுவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

யாழ். நீதிமன்ற நூலகத்தில் யாழ். சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் திரு. எஸ் ஆர் கனகநாயகம் தலைமையில் நேற்றுக்காலை கூட்டம் நடைபெற்றது. [க]

## இந்தியா...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. ஜே. என். டிக்ஸிற் ஊடாக இலங்கை அரசுக்கு தெரிவித்துள்ளது

பொதுமக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் எந்த ஒருநடவடிக்கையிலும் ஈடுபடவேண்டாம் என்று இந்தியா கேட்டுள்ளதாக இலங்கைஅரசிடம் கூறும்படி தூதுவர் திரு டிக்ஸிற் மூலம் இந்திய அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சென்னையிலுள்ள தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களில் ஒருவரான திரு. ஆர். சம்பந்தன் தொலைபேசி மூலம் திரு ரொமேஷ் பண்டாரியுடன் தொடர்பு கொண்டபோதே அவர் இந்தியாவின் வேண்டுகோள் பற்றி கூறினுர்.

## கடைசிநேர வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

இல. 492750387 V சந்திரம்பிள்ளை இராசநாயகம் சுதுமலை வடக்கு மானிப்பாய் என்பவருடைய அடையாள அட்டை தாவடி மானிப்பாய் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில்ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். C 872

### வகுப்புகள்

வயறிங், வெல்டிங், ரேடியோ and ரீ. வி. மோட்டார் மெக்கானிசம், மோட்டர் வைன்டிங், ரேடியோ and எலக்ரோனிக், Short Hand Typing புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. கட்டணம் மிகக் குறைவு. சான்றிதழ் பெறுமதியானது. Vispa Engineering 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 873

## அறிவித்தல்

### மின்சாரத்தடை

இலங்கை மின்சார சபையினரால் சில அத்தியவசிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதால், 23-2-86ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணியிலிருந்து மாலை 5-00 மணி வரையும் 1. குருநகர், 2. சீனுேர், 3. கொன்மென்ற், 4. பாஷையூர், 5. குருநகர் வீடமைப்புத்திட்டம், 6. மனேகரா ஆகிய உப மின்நிலையத்திலிருந்து மின் விநியோகம் பெறும் பாவனையாளர்களுக்கு மின்சாரம் தடைப்படும் என்பது முன் கூட்டியே இத்தால் அறிவிக்கப்படுகிறது.

க. சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ். மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சி அலுவலகம்,
யாழ்ப்பாணம். 20-2-1986.

A 271

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30,
பாண்டியன் — ஜீவிதா
கோயில் யானை

லிடோ சினிமா
10-30, 2-30, 4-45 6-30
James Bond 007
in
Octo Pussy
(Cinemascope Colour)
[Sexy Action and Thrills]

வெலிங்டன்
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதா-சுரேஸ்
நடித்த
ஆனந்த ராகம்
(புதிய பிரதி கலர்)

எமது இன்றைய வெளியீடு
பூவேபூச்சூடவா புகழ் நதியா, ஷாலினியின்
1. நிலவே மலரே
சிரஞ்சீவியின்
2. கொள்ளைக்காரன்
S. பாலச்சந்தரின்
3. பொம்மை
V. G P.
வீடியோ பிரசாத்,
232, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
C 27

## தம்பித்துரை துரையம்மாவைக் காணவில்லை

தம்பித்துரை துரையம்மாவை 19-02-86 தொடக்கம் காணவில்லை. இவருக்கு 65 வயது இருக்கும்: இவர் தனது மகன் வீட்டுக்கு சென்று வருவதாகக் கூறிப் புறப்பட்டார். இவர் சித்தசுவாதீனமற்றவர். வீட்டில் இருந்து புறப்படும்போது சிறிய பூப்போட்ட நீலச் சேலை அணிந்திருந்தார். கையில் ஒரு சிறியதடியுடன்தான் எநநேரமும் செல்வார். இவர் வீடு வந்து சேரமுடியாமல் அதாவது வீடு ஞாபகமறதியால் தவித்துக்கொண்டு திரிகிருரென அறிகிறோம். இவரைக் கண்டவர்கள் உடனடியாக கீழ்க் கண்ட விலாசத்துக்கு ஒப்படைத்தால் ரூபா 500/- சன்மானமும், அவரை ஏற்றிவரும் வாகனச் செலவும் வழங்கப்படும். தயவுசெய்து இவரைக் கண்டுபிடித்து உடனே ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். — நன்றி.

தகவல்
த. இரத்தினராசா,
[கலாபேக்கரி உரிமையாளர்]
ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.

(C 878)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமங்களிலிருந்து மக்கள் பெருமளவில் வெளியேற்றம்

(மாவிட்டபுரம்)

பலாலி விமான நிலையம், இராணுவமுகாம் சுற்றுடலிலும், அயற்கிராமங்களிலும் தொடர்ந்து நிலவிவரும் பதற்றம் காரணமாக அங்கிருந்து பெருமளவில் மக்கள் இடம் பெயர்ந்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பகுதியில் கடந்த சில தினங்களாக ஹெலிகொப்டர் ரோந்தும், அதிலிருந்து துப்பாக்கிப்பிரயோகமும் இடம்பெற்றுவருவதாகவும் கூறப்படுகிறது.

அப்பகுதியில் வாகன நடமாட்டங்களையோ பொதுமக்களின் நடமாட்டங்களையோ கண்டவுடன் ஹெலிகொப்டர் மிகவும் தாழப்பறந்து நோட்டம்விடுவதாகவும், துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது.

1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட பகுதி மட்டுமன்றி அயற்கிராமங்களிலும் இவ்வாறான பதற்றம் நிலவிவருகிறது.

தையிட்டி கிராமத்தில் இரு தினங்களாக இடம்பெற்ற சம்பவங்கள் அங்கிருந்து பொதுமக்கள் வெளியேற வேண்டிய நிலையைத் தோற்றுவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மோட்டார்சயிக்கிளில் வந்தவரை ஹெலிகொப்டர் தாழப்பறந்து சுட்டதாகவும் அவர் மோட்டார் சைக்கிளைப் போட்டுவிட்டு ஓடியதாகவும், வானொன்றில் வந்தவர்களை நோக்கியும் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டபோது அவர்கள் வானைக் கைவிட்டு ஓடித்தப்பியதாகவும், வான் சேதப்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஹெலிகொப்டர்சூடு காரணமாக தையிட்டியைச் சேர்ந்த இளையதம்பி வல்லிபுரம் என்பவரது ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான வீடு பெரும் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

தோட்டங்களில் நீர் பாய்ச்சிக்கொண்டிருப்பவர்களைக் கூட ஹெலிகொப்டர் குறிபார்த்தாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறான பதற்றம்காரணமாக அப்பகுதியில் மக்களின் நடமாட்டமோ வாகன நடமாட்டமோ இன்றி வெறிச்சோடிக் காணப்படுவதுடன் மக்களும் பெருமளவில் அங்கிருந்து வெளியேறிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது இதனால் அயற்கிராமங்களிலும் பதற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# சேவைக்காலபயிற்சி வகுப்புகள் முக்கியம்

[பச்சிலைப்பள்ளி]

கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களை பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அம் மாவட்டங்களில் நடத்தப்படும் சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்களில் கட்டாயமாகக் கலந்து கொள்ளல் வேண்டுமென கேட்கப்பட்டுள்ளார்கள்.

7 ம் ஆண்டு தொடக்கம் 11ம் ஆண்டு வரை கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களைக் கற்பிப்பவர்களே இத்தகைய பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ளல் வேண்டும்.

## சனிக்கிழமைகளில் மட்டும் பயிற்சி வகுப்புகள்

[பச்சிலைப்பள்ளி]

பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி வகுப்புக்கள் இவ்வாண்டு முதல் சனிக்கிழமைகளில் மட்டுமே நடத்தப்படவேண்டுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

முன்னர் இப் பயிற்சி வகுப்புக்கள் பாடசாலை நாட்களிலேயே நடாத்தப் பட்டு வந்தன.

மாணவர்களின் கல்வி பாதிப்படையாத வகையிலேயே இப் புதிய முறை தற்போது அமுல் படுத்தப்பட்டுள்ளது.

## பிரார்த்தனை இயக்கம்: விளக்கம் கிடைக்கவில்லையாம்

[யாழ்ப்பாணம்]

தமிழ் பேசும் மக்கள் சபை இம் மாதம் 27 ம் திகதி நடத்த உத்தேசித்துள்ள பிரார்த்தனை இயக்கம் பற்றிய விளக்கத்தை வட பிரதேச தொழிற் சங்கக் கூட்டுக் குழுவினருக்கு நேற்று முன் தினம் அறிவிக்கப்படவில்லை.

தமிழ் பேசும் மக்கள் சபையின் 3 பிரதிநிதிகளுக்கு உத்தேச பிரார்த்தனை பற்றி நேற்று முன்தினம் பகல் 2மணிக்கு முன்னர் விளக்கமளிக்குமாறு வட பிரதேச தொழிற் சங்கக் கூட்டுக் குழுவினர் கடிதம் அனுப்பியிருந்தனர்.

நேற்று முன்தினம் 3 மணி வரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லையென கூட்டுக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ் பேசும் மக்கள் சபையின் யாழ். ஆஸ்பத்திரி பிரதிநிதிக்கும், யாழ். தபாற் கந்தோர் பிரதிநிதிக்கும் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சமாஜப் பிரதிநிதிக்கும் கடிதங்கள் அனுப்பப் பட்டிருந்தன. (க)

## ஊர்வலம் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக் கழக மாணவர்களின் 'ருகிங்' செயலை எதிர்த்து நடைபெறவிருந்த ஊர்வலம் யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவருடன் பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடாகியதைத் தொடர்ந்து நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

யாழ். பல்கலைக் கழகத்தில் அண்மையில் நடாத்தப்பட்ட 'ருகிங்' கைக் கண்டித்து யாழ். நகரி உள்ள பாடசாலைச் சுவர்களில் கண்டன சுவரொட்டிகள் காணப்படுகின்றன. (ஐ)

## மக்கள் வங்கியை இடம்மாற்ற மக்கள் எதிர்ப்பு

[புலோலி]

பருத்தித்துறை மக்கள் வங்கியை இடமாற்றுவதற்காக இரண்டாவது முறையாகவும் மக்கள் வங்கியினர் சாமான்களை ஏற்ற முயற்சித்தபோதும் பொதுமக்கள் அவற்றை ஏற்றுவதைத் தடுத்தனர். இதற்கு முன்னரும் மக்கள் வங்கியினர் சாமான்களை ஏற்ற முயன்றபோது பொதுமக்கள் தடுத்தனர்.

## கடற்றொழிலாளர் பாதிப்புப்பற்றி மகஜர்

(பண்டத்தரிப்பு)

ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயச் சட்டத்தினாலும் கடல் பாதுகாப்பு வலயச் சட்டத்தினாலும் யாழ்ப்பாணத்திற்குக் கிட்டவுள்ள கடலில் மீன் பிடிக்கச் செல்லும் இப்பகுதிக் கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் தொழிலுக்குச் செல்ல முடியாது பட்டினியால் வாடுவதாகவும் சங்கானை மேற்கு சென் ஜேம்ஸ் கிராம அபிவிருத்திச் சங்கம் ஜனாதிபதிக்குஅனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## ஸ்ரான்லிக்கல்லூரி விடுதி மாணவர் மன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் சனகரத்தினம்மத்திய மகாவித்தியாலயவிடுதி மாணவர் மன்றம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர் திரு. வி மகேந்திரன் ஆசிரியர், தலைவர் செல்வன் ச. இந்திரானந்தன், இணைச் செயலாளர்கள் செல்வன் ப ஜெயசீலன், செல்வி சி. ஜானகி, மேலும் 5 பேர் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர். [ஐ]

## தவக்காலச் சிந்தனை



10ம் நாள்

"நீ பீடத்தின் மேல் காணிக்கை செலுத்த வரும் போது உன் சகோதரனுக்கு உன் மீது மனத்தாங்கலிருப்பதாக அங்கே நினைவுற்றால் அங்கேயே பீடத்தின் முன் உனது காணிக்கையை வைத்து விட்டு முதலில் போய் உன் சகோதரனோடு சமாதானம் செய்து கொள்; பின்னர் வந்து உன் காணிக்கையைச் செலுத்து" [மத் 5/23, 24].

மனிதரோடு கொள்ளும் நியாயமான உறவு, முறையான தொடர்பு இறைவனோடு நிலவவேண்டிய நெருங்கிய உறவுக்கு இட்டுத் செல்கிறது. மனித உறவுகளில் முறிவு ஏற்படுவது அநேகமாக எதிர்பாராத ஒன்றே ஆகும் எனினும், அத்தகைய உறவு முறிவுகள் நிரந்தரமானவையாகக் காணப்படுவதற்கு காரணம் ஒரு சிலரது வைராக்கிய உணர்வேயாகும்.

ஒருவரை பெருமனத்துடன் அவரது குறை நிறைகளோடு ஏற்றுக்கொள்வதும் விளங்கிக் கொள்வதும் உறவுச் சீராக்கலுக்கு வழிவகுக்கும். குறுகிய நோக்கங்களோடு பிரச்னைகளை அணுகுவதை விடுத்து, நேரிய நோக்கங்களோடு பிறரோடு உறவு கொள்ளும் போது சுமூகமான உறவாடல் உருவாகும்.

வின்சென்ற் பற்றிக்
அ. ம. தி

## மானிப்பாய் ஆஸ்பத்திரியில் இலவச வார்ட்

[மானிப்பாய்]

"கஷ்டப்பட்ட மக்களுக்காக ஆரம்பிக்கப்படும் இலவச வார்ட்டினை மக்கள் நல்ல முறையில் பயன் படுத்திக் கொள்ளவேண்டும். முன்னர் ஒரு காலத்தில் இதே போன்ற இலவச வார்ட் இங்கு இயங்கி வந்தது. மீண்டும் இப்போது ஆரம்பிக்கப்படுவது மகிழ்ச்சிக்குரியது" என்று மானிப்பாய் ஆங்கில வைத்தியசாலையில் இலவச வைத்திய வார்ட் ஒன்றைத் திறந்து வைத்து தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சகர் பேராயர் டி ஜே. அம்பலவாணர் உரையாற்றுகையில் கூறினார்.

டாக்டர் தயாளனின் முயற்சியால் திறந்து வைக்கப் பட்ட இக்கட்டடத் திறப்பு விழாவுக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. இராஜன் கதிர்காமர் தலைமை வகித்தார்.

டாக்டர் திருமதி அம்பலவாணர் நன்றி தெரிவித்துப் பேசினார்.

## குண்டுச்சத்தத்தைதொடர்ந்து ஊழியர்கள் வெளியேற்றம்

[சுண்டுக்குளி]

நேற்றுக்காலை பத்துமணியளவில் யாழ். மாவட்டச் செயலகத்தின் முன்பாக திடீரென வெடித்த குண்டுகளின் சத்தங்கள் செயலக ஊழியரை பெரும் பதற்றத்திற்குள்ளாக்கியது.

இதைத் தொடர்ந்து செயலகத்திற்கு வந்திருந்த பெருந்தொகையான பொது மக்கள் சிதறியோடத் தொடங்கியதும் கடைகளும் மூடப்பட்டன.

செயலக ஊழியர்களும் பல உத்தியோகத்தர்களும் செயலகத்தைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர். இதையடுத்து செயலகப்பகுதி வெறிச்சோடிக்கிடந்தது.

## இக் கிணறு மூடப்படும்

[சுழிபுரம்]

சுழிபுரம் காட்டுப்புலம் சிறுவர் பாடசாலை மாணவர்கள் குடிதண்ணீர் தேவைக்காக ஆயிரக்கணக்கான ரூபா செலவிட்டு வெட்டப்பட்ட புதிய கிணற்று நீர் வெறும் உப்பாகவுள்ளது இதனால் இக் கிணற்றை மூடி விட்டு வேறு கிணறு ஒன்று வெட்ட வேண்டியேற்பட்டுள்ளது தொழுநோய் பகுதியைச் சேர்ந்த மக்கள் முன்னேற்றத்தை முன் வைத்து தனியொருவர் அன்பளிப்பைக் கொண்டு இக் கிணறு வெட்டப்பட்டது.

## வவுனியாவிற்கு 40 பட்டதாரி ஆசிரியர்கள்

(பச்சிலைப்பள்ளி)

புதிய நியமனம் பெற்ற 40 பட்டதாரி ஆசிரியர்கள் வவனியா மாவட்டத்திலுள்ள தமிழ் பாடசாலைகளில் இம் மாதம் பதவியேற்றுள்ளார்கள்.

இவர்களில் 31 பேர் கலைப் பட்டதாரிகள் ஆவார்கள். 9 பேர்வர்த்தகப்பட்டதாரிகள் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே அனேகர் வவனியா மாவட்டத்தில் பதவி ஏற்று உள்ளார்கள்

## இன்றைய பலன்

மாதம்- மாசி
திகதி- 9(1986-2-21)
கிழமை- வெள்ளி
திதி- துவாதசி மு.இ.வரை
நட்சத்திரம்- புனர்பூசம் மு இ வரை

மேடம்; புதுமையான எண்ணங்கள் லைதூக்கும் தொழிற் துறையில் புதியசாதனை உருவாகும், கற்றவர்கள் ஆதரவும் உண்டு

இடபம்: உறவுமுறைகள் பலப்படும். உற்சாகம் பெருகும் புதியநண்பர்கள் புடைசூழ்வர் வாழ்த்தும் உண்டு.

மிதுனம்: மோதவரும்பகை, மோசடி நடக்கும். அன்னியரின் தலையீட்டால் சஞ்சலம் ஏற்படலாம், துணிவே துணையென இருக்கவும்.

கடகம்; குடும்பக் கவலையுடன் குறுக்குவழித் தலையீடும் புதிர்படும். வாழ்க்கையில் சோர்வுக்குமிடமுண்டு.

சிங்கம்: இலட்சியப் பாதையில் வெற்றி நடைபோடுவீர்கள்: உயர்வட்டத்து அன்பும் அவசியம் கிடைக்கும். பதவியுயர்வுமுண்டு.

கன்னி: சகோதர வழியால் மனதில சஞ்சலமுண்டு: உள் வீட்டிலேயே பூசல்கள் தோன்றும் உஷாராக இருக்கவும்.

துலாம்: தகுதியில் முன்னேற்றமுண்டு. தரமானவாழ்வும் கிட்டும். எதிரிகள் பணிவர் எதிலும் வெற்றியுண்டு,

விருச்சிகம்: நேர்முகப் பரீட்சைக்கு உகந்த தினம்: தெய்வத்தின் அருளும் தாராளமாகக்கிடைக்கும்,

தனுசு: வாய்வுக் கோளாறினால் வேதனைப்படுவீர்கள். உணவுவிடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். போக்குவரத்தில் அவதானம்வேண்டும்.

மகரம்: இன்பத்தின் அணைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும். காதலர் வாழ்வில் தடைகள் விலகும். பெற்றோரின் ஆதரவும் உண்டு.

கும்பம்: சிறுவிடயத்திற்குக் கூட ஆத்திரப்படுவீர்கள். வீணான சந்தேகங்களும் தோன்றக்கூடும். சிந்தித்துச் செயற்படவும்.

மீனம்: அறவழிகளை மனம் நாடும். வேதனை கொடுத்த சம்பவமொன்று சமரசமாகத் தீர்க்கப்படலாம், சுற்று வட்டாரத்தில் மதிப்புயரும்.

திருமலை
வே. ரவீந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், சிங்கள அகதிகளை மீண்டும் குடியமர்த்த நடவடிக்கைகள்!

[கொழும்பு]

வடக்கு கிழக்குப் பகுதிகளில் அகதிகளாக உள்ள மக்களை அவர்கள் வாழ்ந்த பகுதிகளில் மீண்டும் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை புனர்வாழ்வுத்துறை அமைச்சு துரிதமாக எடுத்து வருகின்றது.

திருகோணமலையில் 18 ஆயிரம் அகதிகளும் மட்டக்களப்பில் பத்தாயிரத்துத் தொண்ணூற்றொரு அகதிகளும் அனுராதபுரத்தில் மூவாயிரம் அகதிகளும் வவனியா, மன்னார் முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஆகிய இடங்களில் தலா இருநூறு அகதிகளும் உள்ளனர் என்று அமைச்சு அறிவிக்கின்றது,

அனுராதபுரத்தில் உள்ள சேரக்கும்பரவிலுள்ள சிங்கள அகதிகளும் யாழ்ப்பாணத்தில் மூவாயிரம் வவுனியா. அனுராதபுரத்திலுள்ள தமிழ் அகதிகளும் குறுக்குளம், பாவற்குளம ஆகிய இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அகதிகள் செட்டிக்குளத்தில் குடி அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே மன்னார் கொக்குளாய் பகுதிகளில் வாழ்ந்த குடும்பங்கள் தமது சொந்தப் பகுதிகளுக்குச் சென்று குடியேற விருப்பம் தெரிவித்துள்ளனராம்.

# யாழ்நகரில் நேற்று ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ. பி ஆர் எல் எவ்) உறுப்பினர் ஒருவரை பிறிதொரு இயக்கத்தினர் சுட்டுக் கொலை செய்ததினுல் நேற்றுக்காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள சகல கடைகள் பாடசாலைகள் மூடப்பட்டன யாழ் கச்சேரி முதற் கொண்டு சகல அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார் காரியாலயங்களும் மூடப்பட்டன.

யாழ் நகரில் சில குண்டுகள் வெடித்தன, இதனைத் தொடர்ந்து யாழ் கோட்டையிலிருந்தும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன (ஐ)

## மயிலங்கூடல் சைவ அபிவிருத்திச் சங்கம்

(இளவாலை)

மயிலங்கூடல் சைவ அபிவிருத்திச் சங்கம் தற்காலிகத் தலைவர் திருமதி பரமேஸ்வரி பார்வதிநாதசிவம் தலைமையில் கூடியபோது சங்கத்தின் புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர், சி. சிவபரன், உப தலைவர்: செல்வி கு. சித்திரா தேவி, இணைச் செயலாளர்; அ. அன்பழகன், பா. மகாலிங்கசிவம், பொருளாளர்: க. கிருபாமூர்த்தி, உறுப்பினர் வ. சிதம்பரநாதன், சி, நவரத்தினம், செ. பற்குணராசா, க. அமிர்தலிங்கம், வி. விசவபாலசிங்கம்- த. பிரேமானந்தன், க. வசந்தி, க. இந்துமதி, சு. உமாரஜனி, கி. ஸ்ரீபிரியா- திருமதி கி. செல்வலட்சுமி, பொ. மனோகரன்.

கணக்காய்வாளர்:- திருமதி ப. பார்வதிநாதசிவம், திருமதி இ. பற்குணராசா.

## விமானத்தாக்குதல்கள் இந்திய அரசு கவலை!

(சென்னை)

யாழ்ப்பாணத்தில் அப்பாவித் தமிழ் மக்கள்மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்களையிட்டு கவலைதெரிவித்துள்ள இந்திய அரசு பொது மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் எந்தவித நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டாமென இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுமாறு இந்தியத் தூதர் திரு. ஜே. என் டிக்ஸிற்றைப் பணித்துள்ளது,

இதனிடையே தமிழர் விடுதலைக்கூட்டணி அங்கத்தவரான திரு. சம்பந்தன் இந்திய வெளியுறவுச் செயலர் திரு. பண்டாரியுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் மீது விமானத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என்று கூறியுள்ளார்.

## "கைதடி முகாம் அகதிகளுக்கு நோர்வே வழங்கிய புனர்வாழ்வு நிதியைத்தருக"

[சாவகச்சேரி]

"கைதடி அகதிகள் முகாமில் இறுதிவரை தங்கியிருந்த குடும்பங்களுள் கைத்தொழில் திறமை, அனுபவம் உள்ள குடும்பங்களின் எதிர்காலப் புனர்வாழ்வு நடவடிக்கைக்காக 1984ம் ஆண்டு ஜூன் மாதம் நோர்வே மக்கள் நிவாரணச் சங்கத்தினுல் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983 நிர்வாகத்திடம் வழங்கப்பட்ட புனர்வாழ்வு நிதியை குறித்த மக்களுக்காக உடன் பயன்படுத்த நடவடிக்கை எடுங்கள்"

இவ்வாறு கோரும் நீண்ட மகஜர் ஒன்றினை அறவழிப் போராட்டக்குழு அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983ம் ஆண்டுத் தலைவர் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளது.

அம்மகஜரில் மேலும் கூறப் பட்டுள்ளதாவது:

"நோர்வே மக்கள் நிவாரணச்சங்கத்தினுல் கைதடி அகதிகள் முகாம் மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைக்கென வழங்கப்பட்ட மூன்று லட்சம் ரூபாவில் இதுவரை ரூபா 28 793 மட்டுமே செலவழிக்கப் பட்டுள்ளது. மீதியாக இன்னமும் ரூபா 271, 07 பயன்படுத்தப்படாமல் சுமார் 20 மாதகாலமாக இருந்து வருகின்றது.

கைதடி முகாமில் இருந்த மக்கள் இப்போது கெற்பலி, மறவன் புலவு திட்டங்களில் முறையே தென்மராட்சி அகதிகள் புனர் வாழ்வுத் திட்டத்தாலும் அறவழிப் போராட்டக் குழுவாலும் காணிகள் வழங்கப்பட்டுக் குடியேற்றப்பட்டுள்ளனர். குறித்த இரு திட்டங்களிலும் வாழ்கின்ற மக்களுக்காக அரசாங்கத்தினுல் வழங்கப்பட்டு வந்த இலவச பங்கீட்டுப் பொருள்களும் நிறுத்தப்பட்டவுள்ளன.

இக்காலகட்டத்தில் குறித்த இரு திட்டங்களில் வாழ்கின்ற மக்களின் எதிர்கால முன்னேற்றத்துக்கு நோர்வே மக்கள் நிவாரணச் சங்கத்தினுல் அறவழிப் போராட்டக்குழு சமர்ப்பித்த திட்ட அறிக்கைகள் பிரகாரம், அகதிகளுக்கான செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தவென அன்பளிப்புச்செய்த பணம் இன்னமும் பயன்படுத்தப் படாமல் இருப்பதற்கான காரணம் புரியவில்லை.

இம் மகஜரின் பிரதிகள் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் அத்தியாவசிய சேவைகள் உதவி ஆணையாளர் திரு. எஸ். தம்பாலன், தென்மராட்சி அகதிகள் புனர் வாழ்வுத்திட்டத் தலைவர் திரு. ஏ கே. இராமலிங்கம், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு க. துரைராசா ஆகியோருக்கும் குழுவினுல் அனுப்பிவைக்கப் படடுள்ளன.

## உடுப்பிட்டிப்பாடசாலைகளில் பாடப்புத்தகங்களின்றி மாணவர் பாதிப்பு!

[புலோலி]

உடுப்பிட்டிக் கல்வி வட்டாரப் பாடசாலை மாணவர்களுக்கு இவ்வருடம் தேவையான 80,500 இலவச பாடப் புத்தகங்களுக்குப் பதிலாக 20,174 புத்தகங்களே கல்வித் திணைக்களத்தினுல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் தேவைக்கான இப்புத்தகங்களில் 25 வீதமான புத்தகங்களே வந்து சேர்ந்துள்ளமையால் இப்புத்தகங்களை எவ்வாறு மாணவர்களுக்கு வழங்குவதென அதிபர்கள் திக்குமுக்காடுகின்றனர்.

புதிதாகப் பாடத்திட்டத்தை மாற்றிய பகுதிகளுக்குப் புதிய பாடப்புத்தகங்கள் வழங்கப்படவேண்டியது முக்கியமாக இருந்த போதும் இப்புத்தகங்கள் வந்துசேராமல் இருப்பதினுல் மாணவருக்குப் பெரும் பாதிப் பேற்பட்டுள்ளதாகவும் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்

இப்பாடப்புத்தகங்களைப் பெற்றோர்கள் கடைகளில் வாங்கித் தமது பிள்ளைகளுக்குக் கொடுக்கலாமென நினைத்தாலும் அப்புத்தகங்களைக் கடைகளில் வாங்கமுடியாதுள்ளதாகவும் பல பெற்றோர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

## கற்கைநகர் தந்த வித்தகன்



முத்தர் வேலுப்பிள்ளை சீதேவன் என்போர்க்கு அருந்தவப்புதல்வனுக யோ. வே. சரவணமுத்து 1910-ம் ஆண்டில் கற்கைநகரில் பிறந்தார். நாற்பது ஆண்டுகள் தலைமை ஆசிரியராக அச்செழு, திக்கம் தட்டாதெரு, நிலாவெளி ஆகிய இடங்களில் அவ்வூர் மக்கள், கவிஞன், பண்டிதன் நல்லாசான், நல்லதிகாரி, நல் தொண்டன் எனப்போற்றுமாறு கடமைபுரிந்தவர். குறிப்பாகத் தனது காலத்தில் அச்செழுவில் ஒரு சனசமூக நிலையத்தை நிர்ணயித்து அவ்வூர் மக்கள் அறிவுசால் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர் என்பது மிகையாது. இவர் தனது ஓய்வுகாலத்தில் தன் பிறப்பிடமாம் கற்கோவளத்தில் பல பொதுச்சேவைகள் செய்து, சிறப்பாக ஆரம்ப சுகாதார நிலையத்தில் போசகராக இருந்து ஒப்பற்ற கடமைசெய்தார். இவர் பாடிய கல்வெட்டுக்கள், வாழ்த்துப்பாக்கள், வரவேற்புப் பாக்கள் கணக்கிலடங்கா.

இவர் 1970-ம் ஆண்டில் தொழில் திணைக்களத்தால் நடாத்தப்பெற்ற தமிழ்க்கழக முத்தமிழ் விழாவில் வெற்றிவாகைசூடி கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் வெள்ளிப்பதக்கம் பெற்றார்.

தனது அந்திய காலத்தில் 'கிறீஸ்துபோதனை நாற்பது' 'குமரன் அலங்காரம்' எனும் கிறீஸ்துவ கவிதை நூல்களை மூலமும உரையுடனும் யாத்துள்ளார். மேலும் 'கந்தபுராண வள்ளியம்மை- திருமணப்படலம் நூலுக்கு மூலமும் உரையும் எழுதிமுடியும் தறுவாயில் இறைவனடி சேர்ந்துவிட்டார். இதனை முடித்து வெளியிடும் பொறுப்பு தமிழார்வம் கொண்ட யாவருடையதுமே.

மு. த[illegible]

## "இதயசுத்தியான சேவை இறைசேவையாகும்" பிரிவுபசாரத்தில் பேச்சு

(யாழ்ப்பாணம்)

"இதய சுத்தியான சேவை செய்வதே இறைவனுக்கு நாம் ஆற்றும் முதல் பணியாகும். நோயாளிகளிடம் இரங்கி, தனது புனிதமான கடமையைச் சரிவரச் செய்யும் ஒரு வைத்தியர் தெய்வத்திற்குச் சமமானவர்" என்று மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் கடந்த 6 வருடங்கள் வைத்திய அதிகாரியாகப் பணிபுரிந்து 47 வருட சேவையிலிருந்து ஓய்வுபெறும் டாக்டர் பி. எஸ் ஜி எம். மூர்த்திக்கு வைத்தியசாலை ஊழியர்களால் நடாத்தப்பட்ட பிரிவுபசார விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய தேசிய உழைக்கும் பத்திரிகையாளர் சங்க நிர்வாக உறுப்பினர் திரு என். பி. பொன்னுத்துரை கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "நோயாளிகள் தம் துன்பத்தின் மத்தியில் இறைவனிடம் வேண்டுவது போலவே ஒரு டாக்டரிடமும் முறையிடுகின்றுர்கள். இந்த நிலையை உணர்ந்து நோயளிகளுடன் பழகுயவர்களே உண்மையான வைத்தியர்களாக முடியும்" என்றுர்.

வைத்தியசாலை மண்டபத்தில் புதிய வைத்திய அதிகாரி டாக்டர் இ. பேரானந்தன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் டாக்டர் மூர்த்தி பேசுகையில் "இந்த வைத்தியசாலை சிறியதாக இருந்தாலும் ஒரு குடும்பம் போன்றது. இங்கு பணிபுரியும் ஊழியர்கள் ஒற்றுமையுடன் செயல்படவேண்டும். மருந்து பெறவரும் நோயாளிகளுடன் இங்கு பணிபுரியும் அனைவரும் மிகவும் அன்பாகப் பழகவேண்டும்.

புதிய வைத்திய அதிகாரிக்கு உங்கள் ஒத்துழைப்பை நல்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இவ்வைபவத்தில் இணுவில் வைத்திய அதிகாரி திரு. கே. ஜெகநாதன் மற்றும் திரு. எஸ் கந்தசாமி, திருமதி கனகராசா, திருமதி ப. கனகரத்தினம், திருமதி குகபாஸ்கரன், சோமாவதி ஆகியோரும் உரை மாற்றினர்.


விக்னு டியூசன் சென்றர்
52,ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

வடமாகாணத்தில் கலை,வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம்வாய்ந்த ஒரே நிறுவனம்

★

இறுதி மீட்டல் விணு விடை வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன

86 A/L

சனி, ஞாயிறு : காலை 8.00 மணி
Day Classes : காலை 8.00மணி

எமது வழமையான தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

பொருளியல் - திரு. கிருஷ்ணனந்தன்
வர்த்தகம் - திரு. இலங்கா
கணக்கியல் - திரு. வன்னியசிங்கம்
அளவையியல் - திரு. சுப்பிரமணியம்
தமிழ் - திரு. குழந்தைவேல்
புவியியல் - திரு. குணராஜா
இந்து நாகரிகம்- திரு. சர்மா
அரசியல் - திரு. மஃறூப்

மு. குறிப்பு: குறிப்பிட்ட திகதியின் மீட்டல் வகுப்புகளுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. 88-ம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வகுப்பு பங்குனி 1ம் திகதிக்குப்பின் ஆரம்பமாகும்.

(A226)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# ‘அந்தப் பிரசுரங்கள்’ பற்றி 1ம் வருட மாணவர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

ருகிங் சம்பந்தமாக கடந்த 17ம், 20ம்திகதிகளில் வெளிவந்துள்ள பிரசுரங்கள் தம்மால் வெளியிடப்படவில்லை என்று யாழ். பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்தெரிவித்துள்ளதாவது:

''யாழ். பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர்கள் என உரிமை கோரப்பட்டு கடந்த 17ம் திகதி ''ராக்கிங் என்பது பல்கலைக்கழக மாணவர்களின் ஒரு பண்பாட்டு அம்சமா'' என்ற தலைப்பிலும் நேற்று 20ம் திகதி ''இவர் நாமல்ல'' என்ற தலைப்பிலும்வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் எம்மால்வெளியிடப்படவில்லை என்பதை முதலாம் வருட மாணவர்களாகிய நாம் நேற்றுக்காலைகைலாசபதி அரங்கில் நடைபெற்ற முதலாம் வருட மாணவர்களின் பொதுக்கூட்டத்தில் உறுதிப்படுத்தியுள்ளோம்.

எனவே எம்மையறியாமல் எமது பெயரில் வெளியிடப்பட்ட மேற்படி இரு துண்டுப் பிரசுரங்களையும் வன்மையாக மறுப்பதுடன் இது தொடர்பான எமது கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும்கடந்த 17ம்திகதிவெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரத்தின் மூலம் சிரேஷ்ட மாணவர்களையும் எம்மையும் பிளவுபடுத்தும் நோக்குடன் சில சக்திகளால் மேற்கொள்ளப்பட்ட ஓர் நடவடிக்கையாக நாம் கருதுகிறோம்.

## யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

ருகிங் என்ற பெயரில் நடைபெறும் துன்புறுத்தல்களையும் மனித உரிமை மீறல்களையும் கண்காணித்து நடவடிக்கை எடுப்பதில் பல்கலைக்கழக அனைத்து ஆசிரியர்களும் இணையவேண்டும் என்று கருதும் எமது சங்கம் இதுகுறித்து பல்கலைக்கழக நிர்வாகம் உறுதியான நிலைப்பாடு எடுக்கவேண்டும் எனவும் பல்கலைக்கழகத்தில் உயர்ந்த நடைமுறைகளை உருவாக்குவதில் ஆசிரியர்களுக்கு உதவவேண்டும் எனவும் வற்புறுத்துகிறது.''

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சகல மாணவர்களுக்கும்அறிவுறுத்தி செய்திஒன்றை விடுத்துள்ளது.

மேற்படி ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள செய்தியில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ருகிங் என்றபெயரில் சிரேஷ்ட மாணவர்கள் புது மாணவர்களைத் துன்புறுத்தும் நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடாது எனப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் தடை விதிக்கப்பட்டிருந்தும் தொடர்ந்து இச்செயல்கள் பாரதூரமான வகையில் நடைபெற்றுக்கொண்டிருப்பது ஒரு பெருங்குற்றச் செயல் ஆகும் இதனைப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மிகவும் வேதனையோடு கண்டிக்கிறது.

பண்பாட்டு மையங்களாகத் திகழவேண்டிய பல்கலைக்கழகங்களில் இத்தகைய அநாகரிகமான செயல்கள் மாணவர்களில் உடலியல், உளவியல் வடுக்களை ஏற்படுத்துவதுடன் சில சமயம் அவர்களது எதிர் காலத்தையும் பாதிக்கின்றன. அது மாத்திரமன்றி ஒருசில மாணவர்களின் வரம்பு மீறிய இச்செயல்கள் முழு மாணவ சமூகத்திற்கும் களங்கம் கற்பிப்பதுடன், அவர்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களாகிய எமக்கும் அவமரியாதையை ஏற்படுத்துகின்றன.

ருகிங்கால் பாதிக்கப்பட்ட முதலாம்வருட மாணவர்கள் என்ற கையெழுத்திட்டு விடுக்கப்பட்ட அறிக்கை மாணவர்களிடையே இத்தகைய பண்பற்ற செயல்களுக்கு எதிர்ப்பு உருவாகியிருப்பதனையும்இதையிட்டு மாணவர் பயன்தரும் வழியில் சிந்திக்கத் தொடங்கி விட்டனர் என்பதனையும் காட்டுகிறது. இத்தகைய மன மாற்றத்தை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வரவேற்பதுடன் இத்தகைய செயல்கள் எமது பல்கலைக் கழகத்தில் இனிமேலும் இடம்பெறாமல் விழிப்பாக இருக்கும்படி பல்கலைக்கழக மாணவர் சமூகத்தைக் கேட்டுக்கொள்கிறது''

[மா]

# “இராணுவத் தீர்வுகள் ஒருபோதும் வெற்றியளிக்காது!”

## இந்திய ஜனாதிபதி கருத்து

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்னையை அரசியல் ரீதியில் மட்டுமே தீர்த்துவைக்க முடியுமென்றும், ராணுவத்தீர்வுகள் எப்போதும் தோல்வியிலேயே முடிகின்றன என்றும் இந்திய ஜனாதிபதி திரு. ஜெயில்சிங் கூறியுள்ளார்.

இந்திய மத்திய அரசின் பட்ஜெட் தொடரை ஆரம்பித்து வைத்து அவர் மேலும் உரையாற்றுகையில்; இலங்கையின் இனப்பிரச்னை இந்தியாவுக்குக் கவலையை அளிக்கிறது என்றும், ராணுவத் தீர்வுகாண முயல்வதனால் பல அப்பாவி மக்கள் உயிரிழக்கவேண்டி ஏற்படும் எனவும் கூறினார்

ஜனாதிபதி ஜெயில்சிங் உரையாற்றுகையில்பெரும்பாலான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சமீபத்திய விலையேற்றங்களை எதிர்க்குமுகமாக பாராளுமன்றத்தைவிட்டு வெளிநடப்புச் செய்தனர். (செ)

## வேலைநிறுத்தம்

(கொழும்பு)

பல்வைத்தியர்கட்கும் 1000 ரூபா அலவன்ஸ் வழங்க மந்திரிசபை முடிவு செய்திருந்தும் சுகாதார அமைச்சுநிதி இல்லை என்று கூறிமறுத்துவிட்டதால் நேற்று நள்ளிரவில் இருந்து அரச பல்வைத்திய சங்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது.

## கண்காட்சி நாளை நடைபெறும்

[யாழ்ப்பாணம்]

யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த ‘அபிவிருத்திக் கண்காட்சி’ தவிர்க்கமுடியாத காரணத்தால் நாளை சனிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது [மா]

## விமானக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு யுத்தம் நடைபெறும் பொழுது எப்படியெல்லாம் விமானங்கள் குண்டுகள் வீசித் தாக்குதல் நடத்துமோ அது போல இப்பகுதியிலும் ஆறு விமானங்கள்அப்பாவிப்பொது மக்கள் வாழும் வீடுக மீதும், பச்சைப் பயிர் விளைநிலங்கள் மீதும் குண்டுகள் வீசித்தாக்கின.

''எமது வரலாற்றில் இது போன்ற ஒரு பயங்கரமான சம்பவத்தை காணவில்லை; இரு நாடுகளுக்கிடையே யுத்தம் நடைபெறுவதை காண்பிக்கும் திரைப்படங்களைப் பார்த்தது போல் இருந்தது இக்குண்டுத் தாக்குதல் சம்பவம்'' என பிரஜைகள் குழுச் செயலாளர் கூறினர்.

மின்னாமல் முழங்காமல் இடி விழுந்ததுபோல சத்தம் சாவடியின்றி ஆறு விமானங்களும் ஒரு ஹெலிகொப்டரும் குண்டுகளை வீசின.

இப்பகுதியில் வசிக்கும் மக்கள் திக்குத்திசை தெரியாமல் பாதுகாப்பான இடங்களை நோக்கி நாலாபக்கமும் சிதறி ஓடத்தொடங்கினர்.

தமது தோட்டத்தில் புகையிலைப்பயிருக்கு நீர்ப்பாய்ச்சி விளையாடிக் கொண்டிருந்த தமது இரு சின்னஞ்சிறார்கள். உருத்தெரியாமல் - தலைவேறு முண்டம் வேறாக சிதைந்துள்ளார்களே இககுண்டுத்தாக்குதலினால்!—என்று கதறி அழுகிறார் அன்னை ஒருவர்.

இப்படியெல்லாம் உயிர்களைப் பலிகொடுத்தவர்களின் அழுகை ஓலங்கள் எம்மை உருகவைக்கின்றன.

(விமானக்குண்டுத் தாக்குதலால் சிதைந்த பல வீடுகளில் சிலவற்றைப் படத்தில் காணுகிறீர்கள்)

## இலங்கைக்கான....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விருப்பதாகத் தெரியவருகின்றது.

சர்வதேச மனிதஉரிமைகள் இயக்கப் பிரமுகரும் வெளிநாட்டு அபிவிருத்தித்துறைக்கான மாஜி பிரிட்டிஷ் அமைச்சருமான திருமதி ஹார்த் ஜூடித் நேற்று முன்தினம் ஜனாதிபதி திரு. ஜயவர்த்தனவையும், அமைச்சரவை உறுப்பினர்களையும் சந்தித்து இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பான பிரச்னைகள் குறித்து உரையாடினார்.

திருமதி ஜூடித் நீலன் திருச்செல்வததைச்சந்தித்து வட, கிழக்குப் பகுதிகளில் நடைபெறும் சம்பவங்கள் பற்றி விடரம் கேட்டறிந்துகொண்டார.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B [illegible]3/81 Eelanadu P. O. Box 49, Telegram, [illegible]nadu, Telephone, 22389, [illegible]6

# ‘அமீன்’ மரணம்: ஈ.பி.ஆர்.எல்.எவ். அஞ்சலிச் செய்தி!

(யாழ்ப்பாணம்)

''தோழர் சோ. ஜெகநாதன் (அமீன்) கொல்லப்பட்டது ஒரு திட்டமிட்ட நடவடிக்கையென்றே கருதுகிறோம்'' என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ‘மக்கள் விடுதலைப் படை’ விடுத்துள்ள அஞ்சலிப்பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அப்பிரசுத்தில் மேலும்குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

''கோட்டை முகாமை சுற்றியுள்ள பகுதிகளில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் காவலர் குழுவிடம் எமது தோழர்கள்தம்மை இனம் காட்டிவிட்டுகோட்டை முகாமை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தனர். இவ்வேளையில் எமது தோழர்கள சென்று கொண்டிருந்த பகுதியிலிருந்து 50 யார் முன்பாக நின்று கொண்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மற்றொரு குழுவினர் எமது தோழர்களை நோக்கி எவ்வித எச்சரிக்கையும் செய்யாமலே துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்கினர். இவ்வேளையில் எமது தோழர்கள் சமிக்கை மூலமும் உரத்த சப்தமிட்டும் தம்மை இனம் காட்டினர் எதிரில் நின்றவர்கள் சக இயக்கத்தவர் என்பதை தெளிவாக இனம் கண்டுகொள்ளக் கூடியதாகஇருந்ததால்எமதுதோழர்கள் பதில் தாக்குதல் எதுவும் மேற்கொள்ளவில்லை.

எமது தோழர் தம்மை இனம் காட்டியபோதும் அவர்கள்தொடர்ந்துமேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எமது தோழரும் சர்வதேச விடுதலை இயக்கமொன்றின் பாசறையில் பயிற்சிபெற்றவருமான தோழர் அமீன் கொல்லப்பட்டார்.''

எமது தோழன் கொல்லப்பட்டமை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை பொறுத்தே இது தொடர்பான எமது நடவடிக்கைளும் அமையும்.

# மரண அறிவித்தல்

## திருமதி அமிர்தரத்தினம் பாலசுந்தரம்

உரும்பராயைச் சேர்ந்த திருமதி அமிர்தரத்தினம் பாலசுந்தரம் (ஆச்சி) காலமானார். இவர் திரு. த. பாலசுந்தரம் (இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், சந்திரமோகன், இந்திரமோகன், பாலமோகன், ராஜமோகன். திருமதி செல்வி சந்திரகாந்தன் ஆகியோரின் அருமைத் தாயாரும், வே. சந்திரகாந்தன், திருமதி ராஜேஸ்வரி. இந்திரமோகன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவர். அன்னாரது ஈமைக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். பா. சந்திரமோகன், செல்விஸ்தான், உரும்பராய், கிழக்கு, உரும்பராய். (C 874)

## நாகலிங்கம் சிதேவிப்பிள்ளை (முத்து)

கரம்பொன் கிழக்கைச் சேர்ந்த நாகலிங்கம் (முத்து) சிதேவிப்பிள்ளை காலமானார். அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் வேலுப்பிள்ளை கதிரவேலு நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், தியாகராசா (உதவி தொழில் ஆணையாளர், ஊழியர்சேம நிதிதிணைக்களம், யாழ்ப்பாணம்), தவமணி சோமசுந்தரம் (நீர்ப்பாசன இலாகா, ஒட்டுசுட்டான்), ஏகாம்பிகை (கனடா), இந்திரா, சதா (பிரான்ஸ்), மகேந்திரராஜா (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகராணி, நவரத்தினம் (ஓய்வுபெற்ற ஜெயிலர், யாழ்ப்பாணம்), ஞானேஸ்வரி, சோமசுந்தரம் (தொழில் நுட்ப ஆய்வுகூட பரிசோதகர், கொழும்பு), திருவருள் (பிரான்ஸ்), ரவீந்திரா லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (21-02-86) பிற்பகல் 4மணியளவில் கரம்பொன் மயானத்தில் நடைபெறும்.

(C 877) நா. தியாகராசா-மகன்

## திருமதி இரத்தினம் சரஸ்வதி

திருமதி இரத்தினம் சரஸ்வதி காலமானார் இவர் காலஞ்சென்ற இளையதம்பி இரத்தினம் அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற (அளவெட்டி) மூத்ததம்பி அட்சலிங்கத்தின் மகளும், காலஞ்சென்ற வைத்தீஸ்வரன், காலஞ்சென்ற மகாலட்சுமி ஆகியோரின் சகோதரியும், இராசநாயகம் (அளவெட்டி), காலஞ்சென்ற பரமேஸ்வரன் (உடுவில்), அட்சலிங்கம் (இளைப்பாறிய சிரேஷ்ட வருமானவரி உத்தியோகத்தர்), கமலாதேவி ஆகியோரின் தாயாரும், ஜானகிதேவி, யோகரத்தினம். தங்கேஸ்வரி. உருத்திரபசுபதி (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) ஆகியோரின் மாமியாரும், சாந்தி (லண்டன்), சுபாஷினி, முரளிதரன் (லண்டன்), வாசுகி, தயாபரன், தேவகி, பிரபாகரன் (யாழ். பல்கலைக்கழகம்), தமயந்தி, கோமதி, காண்டீபன், பிரதீபன், கலாவதி (நீர்வளச்சபை, யாழ்ப்பாணம்), ரகுபதி (லண்டன்). உமாபதி (பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், வவனியா), அனுசூயா, அகல்யா, திருமதி கலாபதி, வாணி ஆகியோரின் பேத்தியும், மாதங்கியின் பூட்டியுமாவார். இறுதிக்கிரியைகள், இல. 529 K. K. S. றோட், யாழ்ப்பாணத்தில் வெள்ளிக்கிழமை பி. பகல் 1-00 மணிக்கு நடைபெற்று, கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்

(C 879) நா. உருத்திரபசுபதி, இ. அட்சலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org